குமரன்

V1. No. 4 15 ஜன 1928

JL
ஹ2U, N28 KH
N28·1·11·
188994

370 Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928௵ மார்ச்சுமீ 15௳ [No. 11.

REGISTRAR
8 MAY 1928
MADRAS

பொருளடக்கம்.

| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 201 | 5. | அரசியல் மலர்வன மல்லிகை (Ruskin) K. இராஜகோபாலன் | 211 |
| 2. | தமிழ்ப் பாடம் | 203 | 6. | அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர். B. A. | 215 |
| 3. | கார்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 206 | 7. | மதிப்புரை | 217 |
| 4. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 209 | 8. | வர்த்தமானம் | 218 |

## கலா நிலயம்.

128994

### ஸ்ரீ கிருஷ்ணஜியின் பிரிவுமொழி.

மேனாடுநோக்கிச் சில தினங்களுக்குமுன் புறப்படுங்காலையில் திவ்யஞானத் தாரகச் சங்கத்தின் தலைவராய ஸ்ரீ. ஜி. கிருஷ்ணஜி இந்தியாவின் நிலைமையைப்பற்றித் தன் கருத்தைத் தெரிவித்துக் கொண்ட பிரிவுமொழிகளைப் பத்திரிகைகளில் படித்தோம். அவ்வுரைகள் ஆழ்ந்த அறிவினாலும் அளவற்ற அன்பினாலும் பிறந்தனவென்று எம்மைப் போல் யாவரும் ஏற்றுக்கொள்வர் என்பதில் ஐயமில்லை. விடுதலை யடைவதற்கென்று இந்நாடு படும் பாட்டை நடுநிலை பிறழாது கருதுவோமாயின், "அகத்தடிமை அகன்றபின்பே புறத்துரிமை எய்துவதுமாகும்" என்றும், "இக்கொள்கையைக்கொண்டு மதிப்போமாயின் உலகத்திலே இந்நாள் எந்நாடும் விடுதலையுற்றதாய் எண்ணத் தகுந்ததாயில்லை" என்றும் அவர் சொல்லியது சாசுவத உண்மையைச் சேர்ந்ததாகும். இந்த மெய்ம்மை மொழிகளின் ஆழம் போமளவு ஆழ்ந்து பார்ப்பாராயின் இவ்விந்தியநாடு விடுதலை யடையவேண்டுமென்று முயல்பவர் வேறுவழி நாடுபவராவர். ஆனால் உயரிய இவ்வுரைகளை உரைக்கவும் வல்லார் அவ்வினத்தோருள் வெகு சிலரே இருக்கின்றனர். அச்சிறு தொகையினரும், வாயிலக்காக இரண்டொரு பெருமொழிகள் பேசப் பயின்றுளாரன்றி உயத்துணர்ந்தவர் அதனிலும் சிலர். ஒருவாறு இதனை உணர்ந்த சிலரிலும், சுயநயங்கடந்து கண்ட வாய்மையை நடத்திவைப்பார் பின்னுஞ் சிலர். பொது ஜனங்களுக்கிடையே இக்காலம் மெய்க்கல்வி யென்பது மருந்திற்குமுண்டோ வென்னும்படி குறைந்திருக்கின்றதாதலால், உரைப்பவர் உரைப்பதற்கெல்லாம் 'ஓம்' என்று திரண்டுவரப் பகுத்தறிவு இல்லா மாக்கள் பலகோடி காத்திருக்கவே, எல்லார் சொல்லும் செல்லும். ஆதலால், அறிவிலும் அறத்திலும் உய்க்காத இச் செல்வாக்கிற்கு எதிராக ஸ்ரீகிருஷ்ணஜி போன்றவர் உயரிய நினைவுகளை எழுப்பி வைப்பதற்கு நன்றிபாராட்ட வேண்டியவரா யிருக்கின்றோம்.

ஆனால், உலகத்தை உற்று நோக்குவோர்க்கு வியப்பைத் தருகின்ற சில சொற்களும் அவர் வாயினின்று வந்திருப்பதாகத் தெரிய வருகின்றது. அவை, இந்நாடு பிறநாடுகளுக்குப் பின்னாகிக் கிடக்கின்றதென்றும், அவ்வாறு பின் விழுந்து கிடப்பதற்குக் காரணங்களாயிருப்பவை எவை யென்றும், அவர் செப்பிய சொற்களேயாகும். இவ்விரண்டினையும் சிறிதளவு கருத்தூன்றி ஆராயப் புகுகின்ற காலையில் வெளிப்பார்வைக்கு எட்டாத சில வாய்மைகள் உதயமாகும்.

இனிய உளவாக இன்னாத கூறுவானேன்! இந்நாடு பின்னாகிக் கிடக்கின்றது என்றுரைப்பதில் சொல் தவிர பொருளொன்றும் காண்கிலேம். நாடென்பது, அதனுள் அளந்துவைத்த மண்ணோ, அல்லது மக்களோ, நாடாவது. இந்தியா என்னும் எல்லைக்குள் இருக்கின்ற மக்கள் மற்றப்பேருடைய எல்லைகளுக்குள்ள மனிதரைவிட எந்தவிதத்தில் பின்பட்டுப்போயினர். குணத்திலும் ஒழுங்கிலும், சாதிக்குச்சாதி தேசத்திற்குத்தேசம் ஏற்றந் தாழ்வு நோக்குவது ஒருநாளும் நுண்ணறிவின் திறமா

காது. எல்லாத் தேசத்திலும் எல்லாக் குலத்திலும் கெட்டவருமுண்டு நல்லவருமுண்டு. ஜனத்தொகை விகிதத்தை வைத்துக்கொண்டு இந்தநாட்டில் நல்லவர் தொகை யதிகம், இந்தநாட்டில் குறைவு என்று கணக்குள் அடக்க வருபவர் என்ன கணக்காளிகள். நல்லவேளை அவ்வாறு கணக்கெடுத்துச் சொல்பவரெவரும் இந்நாள் இல்லையென்றே எண்ணுகின்றோம். குணத்திற்கும் ஒழுங்கிற்கும் பிறப்பிடமாகிய மனநிலையை எடுத்து மதித்தாலும் பெறுகின்ற முடிவு இதுவேயாகும். பெருமன முடையோர் அற்பச்சிறியர் இருதிறத்தோரும் ஒவ்வொரு வீட்டிலும் ஊரிலும் நாட்டிலும் விரவி யிருக்கின்றனர். (பார்க்கப்போனால் லோகாயத மனப்பான்மை இந்தியாவில் இன்னுங்கூட மற்ற நாடுகளினளவு விஸ்தாரமாக வேர்விட்டுப் பரவவில்லையென்றே சொல்ல வேண்டும்). கெட்டதெனில் உலகமே கெட்டதெனச் சொல்வதே பொருந்தும் தாழ்ந்ததெனில் மக்கள் தொகுதியே எங்கெங்கும் தாழ்ந்துபோயது. இந்தியர் தாழ்ந்தவர் என்று சொல்லிச்சொல்லி நாம் வாயிழப்பானேன். ஸ்ரீ. கிருஷ்ணஜி நாம் தாழ்ந்த நிலையில் "பின்னிழுத்துத் தள்ளப்பட்டிருக்கின்றோம்" என்று கூறுகின்றார். இந்தியதேசம் பணக்குறைவால் வறுமையுற்று இருக்கின்றதென்னும் நினைவில் அவர் அவ்வாறு கூறினதாகக் கொள்ள இடமில்லை. பெருமையும் சிறுமையும் பொருள்தர வாரா வென்பது அவ்வறிஞர் அறியாததன்று. வறியரும் ஒரு நாட்டிற்கே உரியவரன்று என்றும் எண்ணுகின்றோம். உலகடங்கலும் மனிதருக்குத் தம்வரையில் உண்ணவொரு நாழியும் உடுப்பதற்கு நான்கு முழமுந்தான் வேண்டியன. இவ்விரண்டுமில்லாமல் திகைத்து வருந்துகின்றவர்களைக் காட்டிலும் பாலுக்குச் சர்க்கரையில்லை யென்று வருந்துகின்றவர்கள் தொகை மிகவும் அதிகம் கூழ் குடிப்பவன் உப்பு இல்லையே என்று வருந்துகின்ற வருத்தம் அதனளவில் ஒரு மடங்கானால், பாலை வைத்துக்கொண்டு சர்க்கரை யில்லாதவன் படும் அவத்தை பதின் மடங்கு. இனிச் செல்வம் நிறைந்ததென்று கருதப்படும் நாடுகளில் தலைக்கித்தனை வருவாய் என்று சிறப்பித்துக் காட்டும்போதெல்லாம், எவனெவன் எவ்வளவு செலவு செய்யும் சாமர்த்தியம் பெற்றிருக்கின்றான் என்பதே நம் கருத்தின் முன் நிற்கின்றது. வருவாயைப் பற்றியதல்ல வறுமை. நாலாயிரம் ஐயாயிரம் என்று சம்பளம் வாங்குகின்றவர் பணம் போதாது படுகின்ற பாடும், நாற்பது ஐம்பது பெறுகின்றவன் கஷ்டமில்லாமல் வாழ்வதும் பார்த்து வருகின்றோம். இல்லையென்னும் நினைவே வறுமையாதலால், அந்நினைவு எங்கும் இருப்பதும் இயல்பாதலால், வறுமையென்ற வார்த்தையாலும் எந்த நாட்டையும் பின்தள்ளி விடுவது பொருந்தாது. இனி, வயிற்றிற்குச் சோறில்லாததே வறுமை என்ற சிறியபொருளில் கொண்டால் என்ன. தனதாய விதிகளும் முறைகளும் (Political Economy) ஒருபுறமிருக்க, இந்தச் சென்னைநகரம்மட்டுமே சினிமாவிற்கும் கூத்திற்கும் (மோடார்வண்டி, குதிரைப் பந்தயம், மதுபானம்போன்ற பெரிய துர்விநியோகங்களைச் சேர்க்கவில்லை) செலவு செய்கின்றதை அவரவர் சேர்த்துக் கொடுத்தால் பிச்சைக்காரர் அத்தனைபேருக்கும் தினந்தோறும் இஷ்டபோஜனம் செய்துவைக்க இயலுமே.

விஷயம் இவ்வாறாக, இந்திய மாந்தரின் நிலைமை தாழ்ந்திருக்கின்றதென்று ஸ்ரீ கிருஷ்ணஜி கூறியது வியப்பைத் தருகின்றதென்றால், இனி யிது முன்னேற்றம் அடைய வேண்டுமென்று அவர் செப்பிய சொற்கள் பின்னும் வியப்பா யிருக்கின்றன.

"இத்தாழ்மைத்தனம் போவதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளை யெல்லாம் செய்தால் இந்தியா பல தேசங்களுக்கிடையே பெரும் பலசாலியாய் ஓங்கி எழுவதுமாகுமே," (India will rise a giant among nations) என்று வற்புறுத்துகின்றார். மன்பதை யுலகம்யாவும் இயற்கையும் நிலைமையும் ஒரே படியிலிருக்க, இந்திய நாட்டின் நிலைமையை வேறாகப் பிரித்து அது ஓங்கி யெழ வேண்டுமென்று சொல்வது வாழ்க்கையின் உயிர் நிலைத் தத்துவத்துள் அடங்குமோ எனும் சந்தேகம் உண்டாகின்றது. அடிமையா யிருக்கின்றோமென்று நம்மையே நாம் இழிவாக நினைத்துக் கொள்வது போலவே, மேன்மையும் நாம் அடைய வேண்டுமென்பது விஷய வேற்றுமையைப் பொய்யென்றறிந்து மெய்யாய ஒற்றுமையை உணராத தன்மையாகும். முன்னது பொருளிலாப் பொறுமை, பின்னது பயனிலாப் பேராசை. பிறநாடுகளெல்லாம் நல்லனவாயின் இந்நாடும் அன்னதே. அவை கெட்டனவாயின் அக்கெடுதி நாமும் உடையோம். ஆதலின், உலகடங்கலும் உள்ள மாந்தருக்குப் பொதுவாய்ப் பொருள்படக்கூடிய மொழிகளே உண்மை மொழிகள்.

ஸ்ரீ கிருஷ்ணஜி, விடுதலை யென்பது உள்ளத்தின் தன்மையைச் சார்ந்து புறத்தே நிகழ்கின்ற செய்தி யென்றும், இந்த விதத்தில் எந்த நாடும் விடுதலை அடைந்திருப்பதாக நினைப்பதற்கில்லை யென்றும் முதற் கூறிய மொழிகளை ஏற்றுக்கொண்டோம். அடுத்தாப்போல் இந்தியா தாழ்ந்த நிலையில் அடிமைபட்டுக் கிடக்கின்றது என்றார். செல்வக் குறைவை நினைத்துத் தாழ்மை கூறினார் என்று எண்ணுவதற்கில்லையென்று முன்னிங்குக் குறித்தோம். மற்று, அத்தாழ்ந்தநிலையின் தன்மை யெது வென்று அவர் காட்டவில்லை. இந்த இந்த விதத்தில் இது தாழ்வடைந்திருக்கின்றது என்று அவர் எடுத்துச் சொல்லி யிருப்பாரானால் அதனுண்மையை ஆராய்வதற் கியலும். எனின், அவர் சொல்லும் தாழ்மை யனைத்தும் இங்கு முன் கூறியவண்ணம் உலகத்திற்குப் பொதுவாய சொற்களே யாதலால் இந்நாட்டிற்கு அவைகளைத் தனியாகச் சார்த்த இயலாது. அயலார் நம்மை ஆள்வதுதான் நமது அடிமைக்குக் காரணம் என்று ஸ்ரீ. கிருஷ்ணஜி எல்லாரையும்போல் சொல்லாதது மிகவும் பாராட்டத்தக்கது. மனத்தைப் பொருந்தியது விடுதலை என்றபின் அரசாட்சிமுறை யெதுவும் மனதை யடக்கி அடிமைகொள்ள இயலாது. சுயராஜ்ய உரிமை சிறிது சித்தவளர்ச்சிக்கு உதவியாகலாம் என்ற மட்டில் காட்டுகின்றார். அவரது அனுபவத்திற்கு பொருந்தியதாயின் இது ஓரளவு உண்மையாயும் இருக்கலாம்.



நிலையின் தாழ்மை எதுவென்று கூறாததால் அவர் கருத்தை வரையறுத்தறிய இயலாமற் போயிற்று எனினும், அந்த நிலையில் இந்தியாவைத் தள்ளிக் கட்டி வைத்திருக்கின்றவைகள் எவையென்று ஸ்ரீ. கிருஷ்ணஜி கணக்கிடுவதிலிருந்து அவரும் எல்லாரையும் போலவேதான் வாயிலக்குப் பேச்சுக்கள் பேசுகின்றாரோ அல்லது உண்மையறிந்து உரைக்கின்றாரோ என்று நம்மனம் ஒருபால்படாது ஊசலாடுகின்றது. "பழைய வழக்கங்களின் உட்கருத்தை உணராமற் பின்பற்றுவதினாற்றான் பாழாகிக் கிடக்கின்றோம்" என்பர். "சமயத்திற் குசிதமாகப் பழையனவற்றைக் கழித்தாலன்றி முன்னேற்றம் அடைதற்கு இயலா" தென்றும் கூறுகின்றார். இவ்விதம் உயிரிழந்துகிடக்கின்ற வழக்கங்கள் நாம் இன்னும் விடாமல் வைத்துக்கொண்டிருப்பன எவையென்று கூறவருபவராய் ஸ்ரீ. கிருஷ்ணஜி, சாதிபேதம், தீண்டாமை, விதவைகளின் கஷ்டங்கள், மாதர்களது நிலைமை போன்ற விஷயங்களையே காட்டுகின்றார். இனி இதன்மேல் நாம் உரைப்பன யாவும், உயர்ந்தோ தாழ்ந்தோ மாந்தரனைவரும் எங்கெங்கும் இருப்பதுபோலவேதான் இந்தியாவிலும் இருக்கின்றனரென்று முன்னே நாம் சொல்லியது சரியென்று நினைத்தாலன்றிப் பொருத்த முடையனவாகா. இதன்படி இந்தியா தாழ்ந்ததென்றால் மற்ற நாடுகளும் தாழ்ந்தனவே. ஆயின், சாதிபேதம் முதலாய தீமைகள் இல்லையென்று கருதப்படுகின்ற அந்நாடுகளும் தாழ்ந்தனவாயிருந்தால் இழுத்துத் தள்ளிய அடிமையில் இந்தியாவைக் கட்டிவைக்கும் சங்கிலித்தொடர்கள் இவைதாமாயின வென்று உரைப்பது எங்ஙனம் அமையும்! தீமைகளெனப்படுமிவை தாம் இங்கிருந்தால் வேறுவேறு தீமைகள் வேறுவேறு நாடுகளில் இல்லாமற்போகவில்லையே. ஆதலால் சாதிச்செருக்கும் மாதர்நிலையும்அடிமைப்பட்ட மனதின் காரியங்கள். இவைகளுக்கெல்லாம் பொதுவாய காரணம் வேறிருக்க அதனின் ஒருவகைக் காரியங்களாகிய இவைகளைப் பழித்து ஏதுபயன். பண்டைநாள் பிறந்த இப்பழக்க வழக்கங்கள் உயிரோடு சிலகாலம் வளர்ந்தனவென்றும், பின்னவை செத்த பிணங்களே இந்நாள் ஆய்விட்டன வென்றும் இப்பிணங்களின் கைகளே நம்மை மேலெழவொட்டாமல் அழுத்திவைத்திருக்கின்றன வென்றும் அவர் சொல்வதில் மேனோக்காகிய உண்மையே காண்கின்றது. இந்தவிதம் உயிரைக்கொன்றது எது வென்று கருதி விலக்காமல் பிணத்தை மாத்திரம் பொறுக்கிப் பொறுக்கி யெறிந்துவிட்டால் உய்ந்தோம் என்னும் நிச்சயம் எங்கிருந்துவரும்! விஷநோய் பரவிக் கொண்டுவரச் செத்தவர்களை யெல்லாம் திட்டித் திட்டிக் கொளுத்துவதோ கடன், மற்று நோயாய்ப் புகுந்ததை ஆய்ந்துணர்ந்து அகற்றுவதோ அறிவு? பெருவாரிப்பிணி புகுந்து ஊரைச் சூறையாடி நிற்கச் சுகாதார உத்தியோகஸ்தன் (Health Officer) நோயேனும் அதற்கு மருந்தேனும் ஓராமல் "செத்தவர்களெல்லாம் செத்தேபோய்விட்டனர்" என்னும் பெரிய தத்துவத்தைத் தேர்ந்தறிந்து, "பிணத்தைப் பொசுக்கிவிட்டீராயின் இனிப் பிழைக்கின்ற பிள்ளைகள் பிறந்து துயர்நீங்குவீர்" என்ற பறை சாற்றுவானெனின் என் நினைப்பீர். நோயோ நிலைத்திருக்கப் பிறக்கின்ற பிள்ளைகள் வாழ்வது எத்தனைநாள்!

ஆதலால், பழையன கழிப்பதற்கு முயல்வதனினும் புதியது புகுந்தது எதுவென ஆராய்வதே முறை. பொய்யாய பொருள்களைப் பொருளென்று பாராட்டித் தனக்குப் பிரதானம் தானே யெனும் அகங்கார மமகாரங்களுக்கு மேன்மேலும் மனிதர் அடிமையாய்க்கொண்டு வருகின்றதற்கு ஏற்ற நினைவுகளும் வாழ்க்கையின் நோக்கங்களும் எங்கும் நுழைந்து பரவி வருகின்றதனால்தான் வழக்கங்கள் மாத்திரமல்ல வாழ்க்கையின் உயிர் நிலையாய தர்மங்களும் உலகடங்கலும் நசித்துவருகின்றது. சுட்டுப் பொசுக்கவேண்டியவை இவைகள். இவ்வகங்காரம் உலகத்தில் தோன்றுதொட்டு இருப்பதுவோ அல்லதிப்பொழுது புதிதாய்ப் புகுந்ததோ என்றுங் கூட ஆராயவேண்டிய அவசியமில்லை. இனி, இவ்வகங்காரம் ஒழியவேண்டுமென்று சும்மாச் சொல்லிக்கொண்டிருப்பது பயன்தராது. 'நோயே நீ போய்விடு' என்று சொல்லிவிட்டால் போதுமா. அதற்குரிய நன்மருந்தும் மந்திரமும் நாடவேண்டும். நோயின் தன்மை இதுவென்று ஆராய்ந்தது தப்பாகப்போகலாம், அல்லது கொடுக்கவேண்டிய மருந்து வேறாக இருக்கலாம். ஆனால் நோயால் படுகின்ற கஷ்டங்களை மாத்திரம் பார்த்து வைவதே வைத்தியம் என்று எண்ணாது, நோயென்றும் அதற்கு மருந்தென்றும் நாம் நினைக்கவேண்டியன பிற என்பது அறிந்து சிகிச்சையைக் கைக்கொள்ள வேண்டுமென்பது எமது வேண்டுகோள். நோய்க்குக் காரணமான விஷயத்தையே மருந்தென்று, அறியாமையாலோ தம் கைச் சரக்கு விற்று முதலாக வேண்டுமென்ற நினைவினாலோ, மேன்மேலும் புகட்டுவார் பெருமையைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ!

## தமிழ்ப் பாடம் 11.

### நள வெண்பா

(191-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. 36.

பதப்பிரிவு :—அறம் கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும் மறம் கிடந்த திண்தோள் வலியும் திறம் கிடந்த செம் கண் மால் அல்லன்எல் தேர் வேந்தர் ஒப்பரோ அம் கண் மா ஞாலத்து அவற்கு.

அன்வயம் :—அறம் கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும் மறம் கிடந்த திண்தோள் வலியும் (ஆகிய)

திறம் கிடந்த அவனுக்குச் செங்கண்மால் அல்லனேல்,
அம்கண்மா ஞாலத்துத் தேர்வேந்தர் ஒப்பரோ !

பதவுரை

அறம் - தருமசிந்தனை
கிடந்த - தங்கிய
நெஞ்சும் - மனதும்,
அருள் - கருணை
ஒழுகு - பெருகுகின்ற
கண்ணும் - கண்களும்,
மறம் - வீரம்
கிடந்த - தங்கிய
திண் - வன்மையாகிய
தோள் - தோள்களின்
வலியும் - வலிமையும், (ஆகிய)
திறம் - தன்மைகள் (எல்லாம்)
கிடந்த - தங்கிய
அவற்கு - அந்த நள மகாராஜனுக்கு,
செம் கண் மால் - சிவந்த (தாமரைபோன்ற)
கண்களையுடைய திருமால்
அல்லனேல் - அல்லாமற் போனால்,
அம் - அழகிய
கண் - இடமகன்ற
மா - பெரிய
ஞாலத்து - பூலோகத்திலுள்ள
தேர் வேந்தர் - தேர்களையுடைய அரசர்
ஒப்பரோ - ஒப்பாவார்களோ !

கருத்து: —இதுவும், நளனைத் தமயந்திக்கு அன்னம் புகழ்ந்துரைத்த வார்த்தை. நளனுக்குச் சமானமாகத் திருமாலைச் சொன்னால் சொல்லலாமே யல்லாது, மற்று இந்தப் பூமியிலுள்ள அரசர் யாரையும் சொல்வதற்கில்லை யென்று, அன்னம் செப்புகின்றது.

குறிப்பு: —1. மறம், இந்த வார்த்தை அறம் என்பதற்கு எதிரான அர்த்தத்தில் வரும். அப்பொழுது பாவம், என்பது பொருள். ஆனால் இங்கு அந்த அர்த்தத்தில் வரவில்லை. வீரம் என்ற அர்த்தத்தில் வந்திருக்கின்றது. யுத்தம் என்ற பொருளும் அதற்குண்டு.

2. அம் கண் மா ஞாலம்: —கண் என்பதற்கு இடம், என்ற ஒரு பொருள் உண்டு. வீட்டின்கண் ஊரின்கண் என்ற உபயோகங்களில் அதைக் காணலாம். அம் கண் ஞாலம், என்றபோது (கண் = இடம்) அழகிய இடமகன்ற பூமி என்று பொருள் கொள்க.

3. அவற்கு. அவன் + கு = அவற்கு. இங்கே வல்லின றகரம் வந்திருப்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். வழக்கத்திலே அவனுக்கு என்று சொல்வோம். எனக்கு, நினக்கு என்றும் வழக்கத்திலே வரும். ஆனால், அவன் என் நின் என்பதனோடு நேராகக் கு என்பதைச் சேர்த்துவிட்டால் அவற்கு எற்கு நிற்கு என்றும் ஆகலாம். இவைகளெல்லாம் ஒருமை (Singular Number). அவருக்கு அல்லது அவர்க்கு (அவர் + கு ) என்றால் பன்மை. இங்கு இடையின ரகரம்.

புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
வுள்ளங் கவர வொளியிழந்த—வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன். 37.

“ அன்னம் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் தமயந்தி நளன்மீது அளவற்ற காதல் கொண்டு செய்வது இதுவெனத் தெரியாமல் திகைத்தவளாய் நின்றாள்” என்று கவி இச்செய்யுளில் அவள் நிலையைக் கூறுகின்றார்.

மன்னன் மனத்தெழுந்த மையனோ யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி—முன்ன
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வாள் மற்று. 38.

பதப்பிரிவு :—மன்னன் மனத்து எழுந்த மையல் நோய் அத்தனையும் அன்னம் உரைக்க அகம் உருகி முன்னம் முயங்கினாள்போல் தன் முலை முகத்தை பாரா மயங்கினாள் என் செய்வாள் மற்று.

பதவுரை.

மன்னன் - நளனது
மனத்து - மனதில் (தமயந்தியின்பால்)
எழுந்த - உண்டான
மையல் - காமமாகிய
நோய் - நோயினது தன்மை
அத்தனையும் - அவ்வளவும்
அன்னம் - அன்னப்பறவை
உரைக்க - (தமயந்திக்குச்) சொல்ல,
அகம் - (இவள்) மனம்
உருகி - கரைந்து,
முன்னம் - ஏற்கனவே
முயங்கினாள்போல் - (நளனை) அணைந்தவளாகத்
தன்னை நினைத்து
தன் - தன்னுடைய
முலை - முலைகளினது
முகத்தை - முனையை
பாரா - பார்த்து (அங்கு அணைத்த குறியொன்றும்
இல்லாததால்)
மயங்கினாள் - கலக்கம் எய்தினாள்.
மற்று - (இந்நிலையில் அவள்) வேறு
என் - என்ன
செய்வாள் - செய்யக் கூடியவள் !

விரிவுரை :—ஒருவர்மேல் ஒருவருக்கு மெய்க்காதல் உதிப்பதற்கு விதியே காரணம். ஊழினால் முன்னமேயே பிணிக்கப்பட்ட இருவர் காதல் எய்துவதற்குக் காட்சிதான் நேரவேண்டுமென்ற நியதியுமில்லை. கேள்வியேகூடப் போதும். நளன் தமயந்தி இருவருக்கும் காதல் அன்னத்தின் மூலமாய்க் கேள்வியுற்றே பிறந்தது.

அன்னம் மொழிய மொழியக் காமனது கணைகள் இவளுள்ளத்துள் பாய்வதாயின, என்று கவி முன் செய்யுளிற் கூறினார். காமனம்பு புகுந்தது என்பதற்குக் காதல் மிகுதியாயிற்று என்பதே அர்த்தம். அப்படி அவளுள்ளே காதல் வளர்ந்தபோது நளனுக்கும் தன்பேரில் காதல் உண்டோ இல்லையோ வென்பது இவளுக்குத் தெரியாதிருந்தது. ஆதலாலும், அவனை வெகு விரைவினில் அடையவேண்டும் என்னும் ஆசையாலும் வாட்டமெய்தி முகம்வெளுத்து நின்றாள் தமயந்தி. அப்படி இருந்தவள் சந்தேகம் தீர அன்னம் நளனுக்கு இவள் பேரில் உண்டான காதலின் வேகத்தை எடுத்துச் சொல்லவே, அவனை அடைவது நிச்சயமாக இவள் தன்னுணர் வழிந்து பரவசமாயினாள். இந்த நிலையில் இவள் நளனை அப்பொழுதே அணைத்துத் தழுவினாள் என்ன எண்ணி மெய்மறந்து இன்பத்துள் ஆழ்ந்திருந்தாள். சிறிது போதினில் அவளுக்குத் தன் நினைவு திரும்பி வந்தது. வரவே, அணைத்ததாய் மகிழ்ந்தது நிசமோ அல்லது மனதின் வெறும் மாயமோ வென்று தடுமாற்றங் கொண்டு,தன்முலையினது முகத்தைநோக்கினாள். தழுவியிருப்பானானால் ஆபரணங்கள் பட்டழுந்தி அங்குக் குறிகள் இருக்குமே. அதுவொன்றுங் காணவில்லை. இப்பொழுது நளனைப் புல்லவில்லை என்று நிச்சயமாயிற்று. நிச்சயமாகவே மயக்கம் எய்தினாள். இனியேனும் ஒரு நாள் அவனை மெய்யுற முயங்க இயலுமோ அல்லது இதுபோன்றே சித்தப் பிரமையாய் முடிந்துவிடுமோ, என்னும் மயக்கமே அவள் எய்தியது ஆகும். நளனது மார்போடு அணைவதற்கொத்த தவம் தன்முலைகள் செய்துளவோ எனும் சந்தேகம் அவளுக்கு உண்டாகி மனங் கலங்கினாள் என்றுகூறிக் கவி, “என்செய்வாள் மற்று!” என்று முடிப்பதினால், இந்நிலையிலுள்ள மாதர்களது தன்மை இத்தகையதென்று புலப்படுகின்றது.

கவிகளின் அர்த்தத்தைப் பூர்த்தியாய்க் காட்டவல்லவர்களும் கவிகளே யாவர். கம்பருக்கும் புகழேந்திக்கும் இவ்விதத் தொடர்பு வெகு அழகாய் அமைந்திருக்கின்றது. கம்பர் குறிப்பாய் விட்டதை இவர் விரிவாகப் பாராட்டியும், கம்பர் விரிவாகக் கூறியிருப்பதை இவர் குறிப்பால் உணர்த்தியும் வருகின்ற செய்யுள்களை ஒப்பு நோக்கி ஆராய்வதால் இலக்கியங்களுக்குச் செம்மையும் இனிமையுமான பொருள்கள் காணும் பழக்கம் ஏற்படும்.

முன், “ அடியிணைச் சிலம்பு பூண்டாற்று மாளிகை ’ என்ற கம்பரது பாட்டில், சிலம்பு அரற்றியது என்று மட்டும் விடப்பட்டிருக்கப் புகழேந்தி, “ மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற மாட்டாது,” என்று சிலம்புகள் கதறிய சொற்களையும் விரித்துத் தந்தார், என்பதைக் காட்டி யிருக்கின்றேன். (22-வது செய்யுள். 131-வது பக்கம்.) இங்குத் தமயந்தி தன் முலைமுகத்தைப் பார்த்ததன் குறிப்பைக் கம்பர் விரிவாகத் தன் நூலில் சொல்லி வைத்திருக்கின்றார்.

கன்னிமாடத்திலிருந்து இராமனைக்கண்டநாள் முதல் அவன்பால் பெருகுகின்ற காதலோடு கரைந்துருகும் சீதையும் தன் முலைமுகத்தைப் பார்த்து,

“ இளைக்கலாத கொங்கைகா ளெழுந்துவிம்மி
யென்செய்தீர்
முளைக்கலா மதிக்கொழுந்து போலும்வாண்
முகத்தினான்
வளைக்கலாத விற்கையாளி வள்ளன்மார்
பினுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள்
செய்மினே. ” என்று வேண்டினாள்.

“ஏ முலைகளே, நீங்கள் பருத்துப் பூரித்திருப்பதால் என்ன பயனைக் கண்டீர். சந்திரனைப்போன்ற முகத்தையுடையனாய் வலிய வில்லைக் கையிலேந்திச் சென்ற அவ்வள்ளலின் மார்பினுள் முழுகுவதற்குச் செய்யவேண்டிய தவங்களைச் செய்து வையுங்கள் ” என்பது இச்செய்யுளின் கருத்து. இந்தச் செய்யுளை மனதில் வைத்துக்கொண்டுதான் புகழேந்திப்புலவர் தன் தமயந்தி முலைமுகத்தைப் பார்க்கும்படி செய்ததும், ‘ என் செய்வாள் மற்று’ என்று முடித்ததும் நேர்ந்திருக்க வேண்டுமென்று எண்ணலாம்.

39. வாவி யுறையு மடவனமே யென்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியாற்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி
[யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

பதப்பிரிவு :—வாவி உறையும் மட அனமே என் உடைய ஆவி உவந்து அளித்தாய் ஆதிஆல் காவின் இடை தேர் வேந்தற்கு என் நிலைமை சென்று உரைத்தி என்று உரைத்தாள் பார் வேந்தன் பாவை பதைத்து.

அன்வயம் :—நான்காவது அடியை முதலில் வைத்துப் படித்தால் பாட்டு அன்வயம் ஆகும்.

பதவுரை.

பார் - பூமியை ஆள்கின்ற
வேந்தன் - பீமராஜனது
பாவை - மகளாகிய தமயந்தி
பதைத்து - பதைத்து,
வாவி - தடாகத்தில்
உறையும் - வசிக்கின்ற
மட - இளமை பொருந்திய
அனமே - அன்னமே, (நீ)
என்னுடைய - என்னுடைய
ஆவி - உயிரை
உவந்து - மகிழ்ந்து
அளித்தாய் - காத்ததாக
ஆதி - ஆகின்றாய், (இனி)
காவின் இடை - சோலையில் (இருக்கிற)
தேர் வேந்தற்கு - தேர்களையுடைய நளனுக்கு
என் - என்னுடை
நிலைமை - நிலையையும்
சென்று - போய்
உரைத்தி - சொல்வாயாக,
என்று - என்று
உரைத்தாள் - சொன்னாள்.

கருத்து :—நளனுக்கும் என்பால் அன்பு உண்டு என்று சொல்லியதால் எனக்கு உயிரே நீ தந்தவன்போல் ஆகின்றாய், இனி நீ காலம் தாழாது நளனிடம் சென்று அவன் மேல் காதலால் நானடைந்த நிலையையும் சொல்லுவாய்,” என்று தமயந்தி அன்னத்தை வேண்டிக் கொண்டாள்.

குறிப்பு:—1. வாவி உறையும் மட அனமே, என்பதில் ‘வாவி உறையும்’ என்றது அன்னங்களின் தன்மையைப் பொதுவாய்க் காட்டுகின்றபடியால், இயற்கை அடைமொழிகள் (descriptive epithets). மட, என்றது மாத்திரம் சிறப்பு அடைமொழி. அவ்வாறே, காவினிடைத் தேர் வேந்தன் என்றதில், ‘சோலையில் இருக்கிற’ என்றது சிறப்பு, தேர் என்பது இயற்கை அடைமொழிகள்.

2. எழுத்துக்களெல்லாம் ஒரு ஒலியின் குறிப்புக்கள். அந்த ஒலியின்மட்டுமே பொதுவாக அவைகளுக்கு அர்த்தம் இல்லை. அ ஆ இ ஈ வரிசையும், க் ங் ச் ஞ் வரிசையும் க கா கி கீ, ச சா சி சீ போன்ற வரிசைகளும் எழுத்துக்கள். இந்த எழுத்துத் தனியாக நின்றாவது அல்லது சில எழுத்துக்கள் சேர்ந்தாவது அர்த்தம் தருமானால் அப்பொழுது சொல் ஆகும். சொல் பதம் மொழி என்பனவற்றிற்கு, அர்த்தம் தருகின்ற வார்த்தை என்பது பொருள். பு என்பது ஒரு எழுத்து, லி என்பது ஒரு எழுத்து. இவைகள் தனித்தனியாக நின்றால் ஒலி மாத்திரம் உண்டு, அர்த்தம் இல்லை. ஆனால் புலி என்று இரண்டும் தொடர்ந்தால், புலி யென்னும் மிருகத்தைக் காட்டுகின்றபடியினால், அது பதம் ஆகின்றது. அப்படியே அம்பு என்பது மூன்று எழுத்துக்கள் சேர்ந்தும், கடவுள் என்பது நான்கு எழுத்துக்கள் சேர்ந்தும், சந்திரன் என்பது ஐந்து எழுத்துக்கள் சேர்ந்தும் அர்த்தம் பெற்றுப் பதங்கள் ஆகின்றன. எழுத்துக்கள் சேர்ந்தாலும் அர்த்தமில்லாமற் போனால் அவை பதங்

கள் ஆகா. லிபு ரைதமா குடசல என்று வந்தால் அர்த்தமில்லை ஆகையால் அவை பதங்களுமல்ல.

இனி, எழுத்துக்கள் ஒன்றிற்கு மேற்பட்டுச் சேர்ந்து வந்துதான் பொருள் தரவேண்டுமென்ற நியதியில்லை. ஒரே எழுத்துத் தனியாக நின்றும் ஒவ்வொரு சமயம் அர்த்தம் பெற்றிருக்கலாம். பூ - புஷ்பம். நா - நாக்கு. வா, போ, நீ, கை, ஆ - பசு. என்பன போன்ற சில எழுத்துக்கள் தமிழில் தாமே அர்த்தம் தரக் கூடியனவா யிருக்கின்றன. இப்படிப்பட்ட தனி எழுத்துக்கள் அர்த்தம் தரும்போதுமாத்திரம் அவைகளே பதம் எனப்படும். பூப்பறித்தான், என்று சொல்லும் போது பூ என்றது புஷ்பம் என்ற அர்த்தம் உடையதாதலால் பதம். பூட்டு, என்ற பதத்தில் பூ என்றதற்குத் தனியாய் அர்த்தமில்லை, ஒரு ஒலியாகவே வந்திருக்கிறது, ஆகையால் எழுத்தே. இவ்விதமாகத் தமிழில் தனியாக நின்று அர்த்தம் கொடுக்கக் கூடிய எழுத்துக்கள் நாற்பத்திரண்டு இருக்கின்றன. அவைகளுக்கு இலக்கணத்தில் ஓரெழுத் தொருமொழிகள் (ஓர் + எழுத்து + ஒரு + மொழி) என்று பெயர்.

இந்தப் பாட்டில் வந்திருக்கிற, காவினிடைத் தேர் வேந்தன் என்பதில் கா, என்றது ஓரெழுத்தொரு மொழி. சோலை என்பது அர்த்தம். இந்த அர்த்தத்தில் கா வென்பது பெயர்ச்சொல். அதுவே வினைச் சொல்லாக வந்தால் வேறு அர்த்தம். நாய் வீட்டைக் காக்கும், என்றபோது, கா என்பது காப்பாற்றுகிற தொழிலைக் காட்டுகிற வினைச்சொல்.

3. வேந்தற்கு. முன் 36-வது பாட்டில், அவன் + கு என்றது அவனுக்கு என்றாகாமல் அவற்கு என்று புணர்ந்ததுபோல் இங்கும், வேந்தன் + கு என்றது, வேந்தனுக்கு என்று வழக்கமாய்ச் சொல்கின்றபடி யாகாமல் வேந்தற்கு, என்று புணர்ந்தது. ஒருமைதான். பல வேந்தராயிருந்தால் வேந்தர் + கு = வேந்தர்க்கு, என்று இருக்கும்.

4. ஆதியால், என்பதிலுள்ள ஆல் என்றதற்கு அர்த்தம் இல்லை, அசை.

மன்னன் புயநின் வனமுலைக்குக் கச்சாகு [னும்
மென்ன முயங்குவிப்பே னென்றன்னம்—பின்
பொருந்தவன்பா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பாற் போன தெழுந்து. 40.

கருத்து:—'அப்படியே நளன் நின்னைச் சேரவைக்கின்றேன்' என்று அன்னம் தமயந்திக்கு உறுதிகூறி நளனிருந்த சோலைக்கு மீண்டும் போகப் புறப்பட்டது.

காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(186-வது பக்கத் தொடர்ச்சி)

## 9. மந்திராலோசனை

மாளிகையின் மேனிலையில் மடாதிபதி தேற்றச் சிறிதளவு தேறிய விச்வகேசரி வேந்தனுக்குமுன் மணிவாளனும் கஜேந்த்ரஸிம்மனும் எதிரெதிர் கறுவி உருமினராய் வீற்றிருப்பதையும் வஞ்சனையே வடிவெடுத்த விராடபத்ரன் அவ்விருவரையும் கருதி நிற்பதையும் சித்ராங்கன் கண்டு சித்திரச் சிரிப்பொன்று சிரித்துத் தன் தந்தையை அணுகி வணங்கியெழ, மன்னனும் தன் மகனை மனமுவந்து வாழ்த்தி அங்கிருந்தவர்களை நோக்கிப் பின்வருமாறு பேசினான்.

"மன்னர்காள், அரிய கருமம் சில ஈண்டு ஆராய்தற்குள. பௌத்த மதத்தால் எம் நாட்டோர் ஈச்வரத்வேஷிகளாகா வண்ணம் அன்னவரை வதைத்துத் தமித்திடத் தனக்கு வரம்பற்ற அதிகாரம் வேண்டுமென்று நமது மடாதிபதி ஸ்ரீ அகிலாண்டேச்வர ஆசார்யசுவாமிகள் எம்மை வற்புறுத்திக் கேட்கின்றனர். இன்னதன் பொருட்டு யாம், சமயகோடிகளெல்லாம் தம்தெய்வம் எம்தெய்வமென்று எதிர்வழக்கிட நின்ற அப்பரம் பொருளையே துணைகொண்டுளோ மாதலின், நுமது கருத்தேனும் உதவியேனும் எமக்கு இதுபோது இன்றியமையும். மற்றொன்று, பேரவாப் பேயும் படைவலி மதமும் தலைக்கொண்டாடும் காஷ்மீரத்து மன்னவன் வருதினி வகுப்பது நும்போன்ற வீரர்தம் துணைநலம் வாய்க்கப்பெற்ற எமக்கு நகையே விளைக்கின்றது. போரென்ன வீங்கும் பொருப்பன்ன தோளீர், பிரிந்து வாடிய ஜயமகளைப் பின்னும் புணர்ந்த செவ்வியராமின். இனி, ஒத்துடன் வாழ்வதெனும் பெற்றியுணரா இப்பெருங் குன்றத் தலைவர்க்குள் மீண்டுமோர் மாறுபாடு மூண்டுளதாம் ........இது கிடக்க......யாம் இங்கு வீற்றிருப்பது மதியாது இம்மடத்தின் முன்றிலில் பூசலொன்று நேர்ந்ததெனத் தெரிய வருகின்றது. எம்மை இகழ்ந்து இது செய்ததில்லை என்று உணர்ந்தோமெனினும் மறுமுறை நிகழாவகை நாட்டுவதற்காவன செய்யா தொழியோம். மற்று, இக் கலாந்தன்னின் விவரமதை விளம்புவீர் !"

"குழப்பம் துவக்கிய காலத்தில், அண்ணா, நான் தேவரீர் முன்னிலை விட் டகன்றில னாகையால், அன்னதற்குக் காரணம் யானறிய் இடமில்லை" என்றனன் விராடபத்ரன்.

"என்வரையில், பாண்மகள் ஒருத்தியின் இன்னிசையன்றிப் பூசலின் ஓசையொன்றும் கேட்டிலன். முந்திரிக் கொட்டைப் பாணமல்லது பாணப் பிரயோகம் எதுவும் கண்டதுமில்லை" என்று சித்ராங்கன் புன்னகைக்கிடையே பேசினான்.

மணிவாளனும் எழுந்து, "இந்நகர் உறையும் நும்குடிகள், கஜேந்த்ரஸிம்மரது சின்னங்களைத்தரித்த சேவகர் சிலரைத் துரத்தியடிக்கக் கண்டேன். எனினும் ஓடினோர் ஓடிய ஊக்கமே நோக்கில் அன்னவர் இம்மன்னவன்பால் போர்பயின்ற படைஞராதல் திண்ணமன்று," என்றனன்.

கஜேந்த்ரஸிம்மன் தன் பற்களை நறநறவென்று மென்றனனாகி, "எந்தலை, கேட்டருள். காந்தாரநாட்டில் நடக்கின்ற கலாம் அத்தனைக்கும் காரணம் நானேயோ! பழிக்கெல்லாம் என்னையே பாத்திரனாக்க இங்குளார் துணிந்தது ஏனோ அறிகிலேன். நினதயலே நின்றுவிட்டதாகக் கூறி இத்தம்பியார் தன் கடனைக் கழித்துவிட்டார். தனக்கான வயதிற்கும் பதவிக்கும் புலமைக்கும் பொருந்தா ஒரு பாணத்தியுடன் முந்திரிக்கு விலைபகர்ந்த இச்சித்ராங்க இளவரசர் உரைத்தது ஒரு பொருளல்ல....



சிரிக்கின்றனரோ!......நல்லது. இரத்தினபுரி பித்தர் துரத்த எனதிணையற்ற வீரர் வென்னிடக் கண்டதாக விளம்பிய இம்மணிவாள மன்னருக்கோ ஒரு மாற்றம் புகலாது விடேன்," என ஆங்கே, "எதிர்மாற்றம் தர என்னுடை வாளுளது!" என்றெழும் மணிவாளனை அரசன் கையமர்த்தி மீண்டும் கஜேந்த்ரஸிம்மனைப் பார்த்துக் கம்பீரமாய், "மன்னா, எம்மவையு ளமர்ந்தோரை எளிவர உரைத்ததன்றி அச் செருவிளைந்த பரிசு தெரிவித்த பாடில்லையே!" எனக் கேட்டனன்.

கஜேந்த்ரஸிம்மன் வணங்கியறியாத் தன் தலையைச் சிறிது சாய்த்து, "வேந்தர் பெரும, யான் இம்மடந்தனை யணுக எனது பரிவாரங்களுடன் வையாளி வீதிவாய் வந்தபோது, இந்நகரத் தொழிலாளக் கீழ்மக்கட் சிலர் சதுக்கத்தலத்தில் மொய்த்தனராகி ஆர்ப்ப, அருகிற் சென்றேன். சந்தியின் நாப்பண் கோலொன்று நாட்டி வெட்டுண்ட இக்கைக் குறையை அதனுடன் அறைந்து இவ்விளம்பர ஓலையும் அன்னதன் கீழ் நாலவிட்டிருந்தனர்." என்று சொல்லி அக்கையையும் ஓலையையும் தன் பையினின் றெடுத்துக் கூசிய அவ்வரசனது கண்முன் காட்டினான். காட்டவும் அரசன் ஓலையைவாங்கி மடாதிபதியிடம் கொடுத்து, "இதில் தீட்டியது ஓதுவீர்," என அவரும் இவ்வண்ணம் வாசித்தார்.

சிகாவிலாசம்
இரதிபௌர்ணிமி.

"இவ்வணிநகர்த் தலைவராகிச் சிகாவிலாஸ மாளிகை தன்னில் உறைதரும் சந்த்ரசேகரப் பிரபுவெனும் யாம் இவ்வோலையால் அனைவருமறிய அறிவிப்பதொன்றுண்டு. இச்சமயம் இந்நகரில் போந்துள மன்னர்களைச் சேர்ந்த தூர்த்தன்யாவனோ கருணாகரரெனும் பெரியவர் மனையைக்கொள்ளைகாண ஆட்கள் துணையொடு நெருநல்லிரவு தாக்கியுள்ளான். தீச்செயல் புகுந்த கைகளுள் ஒன்று இஃது அற்றது. அப்பாதகன் தனக்குப் பரிபவம் ஆக்கவே நாடுசிரிக்க இக்கையைச் சந்தியில் நிறுத்தி இருக்கின்றோம். இவ்வாறு நாம் செய்வித்த நிந்தனையைப் பொறுத பிரபு எவரேனும் உளராகில், அன்னவர் தம்முடன் இக்கொள்கை பொருட்டுத் தனிப்போர் செய்யச் சித்தமுமாவோம். அறியவும்!"

தனிப்போர்க் கழைத்த இவ்வோலையை மடாதிபதி படித்து முடித்ததும், கஜேந்த்ரஸிம்மன், "பிரபுக்கள் குலத்திற்கோர் அடாப்பழி சுட்டிப்பேசும் இக்கையையும் ஓலையையும் அகற்றுமாறு கட்டளையிட்டேன். அன்னவாறு செய்த எனதாட்கள் மீது இவ்வூர்மாக்கள் கல்லெறிந்து கூவிக் குழப்பம் விளைத்துத் தொடர்ந்தனர். தொடர்ந்தவர் நடுவில் புகுந்து வாள்கொண்டு உழுவது கருதிய என் சேகவர் தம்மை விலக்கி யான் 'விரைந்து நடமின்' என ஆணை தந்தேன். ஆணைக்கடங்கிய இவர்களைத்தான் மணிவாள மன்னன் பயந்தோடியவரெனப் பழுதுரைத்தது! இது கிடக்க, அரசே இந்நகரக் கீழ்மக்கள் பிரபுக்களை இவ்விதம் நிந்திக்க இடம் தருவது தகுதியோ!" என்றனன்.

"அல்லதென்று மதிப்பவன் சந்த்ரசேகாருடன் தனிப்போர் செய்யத் துணிவதல்லவோ திறம்," என்றனன் மணிவாளன்.

"மன்னவர்தம் பெருமை யுணர்ந்தோர் இது புகலார். என்னுடன் வாள்கலக்க அச் சந்த்ரசேகரற்குச் சமநிலையில்லை. எலியொடு சீறுமோ சிங்கந்தான். வீரமு மானமுமின்றி மன்னனெனப் போலிப் பேர் சுமக்கும் பதடிகளையே முதலில் என் கத்திக்கு இரையாக்கக் காத்திருக்கின்றேன்!" எனக் கஜேந்த்ரஸிம்மன் தாழாமற் பதிலுரைத்தான்.

மணிவாளன் கதுமென வெழுந்து, "கேளாது விட்டது கடன் எனும் குறைவேண்டாம். ஏ, மூர்க்க, மதியிலாப் பதரே, உருவுவாய் உன் கத்தியை!" என்று தெழித்துத் தன் வாளை யுருவினன். கஜேந்த்ரஸிம்மனின் வாளும் வெளிவந்து விட்டது. விச்வகேசரியரசனோ வெகுண்டு, "மணிவாள, கஜேந்த்ரஸிம்ம, நனி செய்தீர். எம்முன் இது நிகழ்வதோ! நன்று நன்று நும் கருமம்!" எனமொழிய மணிவாளன் தலைவணங்கி, "எனதிறைவா, வாழி, மடமையேன் இப்பிழை பொறுத்தருள்வீர். யானிவ்வவைக்கண் உறைதற்கானவனல்லன். முழுமூர்க்க மாக்களாலும் மாயவஞ்சனை மலிந்த கபடர்களாலும் தேவரீர்க்கு ஒரு தீங்கு நேராவண்ணம் கடவுளே காத்தருள்வாராக.........வேந்தே, என்னொடு மீள்கின்றேன்....... சித்ராங்கா, பேதை நீ! நமன் வாயிற் களிக்கின்றாயை நினைக்கவே என் ஆவி சோரும். இருந்தும் பயனிலா யான் போதலே நலம்!" என்றுரைத்து விரைவொடு டகன்றனன்.

மணிவாளன் இவ்விதம் அகல்வது எதிர்ப்பாராத அரசன் திகைத்தனன். கஜேந்த்ரஸிம்மன் முடுகி எழுந்து, "வேந்தே, இத்துரோகி காஷ்மீரனுக்கு நம் நாட்டைக் காட்டிக்கொடுக்கவே இன்று ஏகுகின்றனன். ஐய, எனக்கு ஆணைதந்தால் அவன் காலில் தளைபூட்டிநொடிப்பொழுதில் இங்கு நிறுத்திவிடுகின்றேன்." என வேண்டினன். விராடபத்ரனோ, தனது வஞ்சனையை அறிந்து அதைச் சொல்லியும் காட்டிவிட்ட மணிவாளன் போவதே நன்றெனக் கருதி, "மன்னா, ஆத்திரம் ஏன்! மணிவாளன் நம்முடன் பகையொடு வந்ததில்லை யாகையால் அவன் போவதைத் தடுப்பது அரசநீதி யாகாது" என விலக்கக் கஜேந்த்ரஸிம்மன் வாய்விட்டுச் சிரித்து, "என்னே, விபரீதம். விராடபத்ரன் இன்று மனுநெறி மறக்காதிருந்தது!" என்றுரைத்துப் பின்னும் நகைக்க அரசனும், "மணிவாளன், பெருந்தகையுடையவன், கொடியோனல்லன். எம்பால் தீதுசெய்யான்.........யாம் அவனுக்கு இழைத்த பிழையோ பெரிது.........ஆயினுமவன் பொறுப்பன்.........நல்லது, இனி இப்பெருங் குன்றக் கருமம் கருதுவோம். சுவாமிகாள் இதன் நிமித்தம் தம் கருத்து யாதென அருள்வீர்!" என வினவினன்.

"அங்குக் கீழ்ச்சாரல் வாழும் வஜ்ரதரத் தலைவனுக்கும் மேற்சாரல் மேவிய காலமாருதத் தலைவனுக்கும் பல ஆண்டுகளாய்ப் புகைந்த பகை இப்பொழுது கனன்று அழல்வதாயிற்றென்று ஒற்றன் கூறியது கேட்டேன். இக்கடு நெருப்பு இருவரையும் நீறாக்காது அமையாது. அரசே, இருதிறத்தோரும் படையுடன் பொருது ஒன்றுபட மடியாவண்ணம் அவ்விருவரும் பகையொழிந்து வாழும் வண்ணம் இங்கிருந்து திறமும் தருமமும் வாய்ந்த சிலதூதர்சென்று சந்துபட உரைத்தலே நின் செங்கோல் பெருமைக்குச் சிறப்புடையதாகும். இத்தூதை அரிய வகையில் முடிக்கவல்ல துறவிகள் பலர் இம்மடத்தின் கண் உளர்." என்று தன் கருத்தைச்சொல்லும் ஆசார்யஸ்வாமிகளைத் தடுத்துக் கஜேந்த்ரஸிம்மன், "படையாற்றல் இல்லா அரசர்க்கல்லவோ, மன்னவா, தூதர் திறம் வேண்டும். யாமொரு சிறுபடை விடுத்து அவ்விரு குறும்பரையும் தனித்தனி யடக்கி அன்னவரைச் சிறைக்கூடம் சேர்ப்பதை யல்லாது சமாதானத்தைப் பற்றிப் பேசுவதேன்! தூதும் அத்தீயவர்பாற் பயன்படாது. கொள்ளைக்காரக் கூட்டமாயிற்றே அது. நானொரும் நாட்டில் கொள்ளைக்காரர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்தறியேன். அத்திருடர்களையெல்லாம் ஒருங்கே தூக்குமாத்திலிட்டுத் தீர்ப்பதே தக்கது!" என மொழியுங்கால் சித்ராங்கன் முகத்தில்

சிரிப்புத் தோன்றியது கண்டு, மருக, இம்முறையான் நின் இளிவரு நகைக்கு ஆளானது எவ்வகையில்!" என வெகுளச் சித்ராங்கன், "மாதுல, வெகுளலேன்! நீர் வகுத்தபடி திருடர்களை யெல்லாம் தூக்கிலிட்டுவிட்டபின் உமது பரிவாரத்தில் தரைமீதிருக்க வல்லோர் எத்தனைபேர் என்று கணக்கிட்டேன். விஞ்சாதது காண நகை வந்தது!" எனத் தணித்தனன்.

இதன்பின் அரசன் விராடபத்ரனை, "நின் கருத்து யாது சொல்" என, அவனும் சொன்னான். "அண்ணா நமக்கேன் கஷ்டம். அவ்விரு திறத்தினரும் தம்முள் பொருது தாமே பூண்டின்றி நசிக்கட்டுமே. பெருங்குன்றம் நினது ஆட்சிக்கு உட்பட்டதேனும் ஆணைக்கடங்கவில்லை. காஷ்மீரத்தவனை எதிர்ப்பதற்கான நம் படையைப் பெருங்குன்றமனுப்பிக் குறைப்பது இத்தருணம் நேரிதாகாது. அவர்பால் தூது பயன்படுவதும் துர்லபம். இத்தூதிற்கு ஒருவன் இணங்கி மற்றவன் இணங்கானில் முன்னவனுக்கு உதவி தருவது நமக்குக் கடமையாகி அதனால் இருவர்பொர நாம் ஒருவன் சார்பு நின்றோம் எனும் பழியும் வரும். ஆதலால் குன்றத்தவர் அற்றொழிந்து பூபாரம் தொலைவதே சூழ்வோம். இந்நகரவாசிகளும் பின் இராப்பயமின்றி வாழ்வர்."

இச்சுடுசொல் கேட்ட மடாதிபதி செவிபொத்தி, "இறைவா நுமக்குப் பின்பிறந்தவர் கூறிய இந்தச் சூழ்ச்சி சாணக்யதந்திரமாகலாம், இராஜதர்மமோ ஒருபோது மாகாது. பூபாரம் தீர்க்கவோ மன்னா, நீ, செங்கோல் ஏந்திச் சிம்மாதனம் வீற்றிருப்பது! அரசற்கு நாற்படையன்றி மாசிலாவொரு மதிக்குடையுளதெனும் மாண்மை பொய்யோ! கோத்தருமந்தனில் கருணை கூறுதோ, கூறுக!" எனப் பரிந்திரங்கினார்.

"கோத்தருமம் ஆகுமோ ஆகாதோ யானறியேன். தோள்வலியால் தீர்ப்பதைத் தந்திரத்தால் வகுக்க முயல்வது என்னனைய வீரர்க்கும் ஏற்காது," என்று கஜேந்த்ரஸிம்மனும் சாற்றினான்.

இந்தச் சமயத்தில் சித்ராங்கன் அரசனைத் தொழுது, "எனதந்தாய், வேந்தே, என் சிற்றப்பன் பெருஞ்சூழ்ச்சியும், தெய்வமன்ன நம் குலகுருவின் தர்மோபதேசமும், எம் மாதுலமன்னனது வீராவேசமும் யாவும் கேட்டீர். சிறுவன் யானும் கூறுவதொன்றுளது. வஜ்ரதரத் தலைவனையும் காலமாருதத் தலைவனையும் வரவழைத்து இருவரும் தனிப்போர் புரிந்து தம் பகையைத் தீர்த்துக்கொள்ளத் தூண்டுவோம். ஒருவன் தலையொடு பகையும் போரும் முடியும்." என, விராடபத்ரன் "ஆம், ஆம். தக்கதே செப்பினன் எம்மகன். ஆனால் தனிப்போர் வேண்டாம். பக்கத்திற்கு ஒரு முப்பது வீரருடன் தேவரீர் முன்னிலையிலே சண்டையிடச் செய்வோம். விஞ்சியவனுக்கு வெற்றி, அஞ்சியவன் அழிகின்றான்," என்று மொழிந்தான்.

"கொலையும் போருமின்றி இப்பகைநிலை தெளிதற்கு ஒரு மார்க்கமில்லையோ!" என்றேங்கினன் அரசன்.

"குணதோஷங்களை ஆய்ந்து பார்ப்பீர். அவ்விரு திறத்தினரும், தந்தையே, பக்கமும் கிளையுமாய் என்னொடு புனலும் வார்ப்பதற்குக் கூட நின்றவரில்லாமல் அடியுடன் மடிவதா? மற்று, அவர்தமை அடக்க நாம் போரெடுத்துச் சென்று நமது படைவீரரை மாய்வித்து மீள்வதா. அல்லது இரண்டொரு உயிருடன் பெருங்குன்றக் கலாமே அகல்வதா! சொல்வீர்," என்று இரங்கிய தந்தைக்குச் சித்ராங்கன் எடுத்துக் காட்டினான். 'இதற்கு நான் ஒவ்வேன்' என்பது தோன்றக் கஜேந்த்ரஸிம்மன் தலையசைத்திடல் நோக்கி இளவரசன் மீண்டும், "அண்ணா, புண்ணீர் பெருகாமல் போர் ஒடுங்கக் காண்பது இம்மன்னர் தன் மானத்திற்குக் குறைவாய்க் கருதினாலும்...." என்று சொல்லி முடிக்காமுன் கஜேந்த்ரஸிம்மன் தடுத்து, "நாடோடிப் பாத்தை இட்டமாலையைக் கழுத்துவிட் டகற்றாது திரியும் சித்ராங்கனா மன்னவர்தம் மானத்தைப்பற்றிப் பேசுவது," எனக் கர்ச்சிக்க அவன் மருகனும், "ஏ மன்ன, நான் என்ன செய்வது! வேண்டா வெறுப்பாய் மனைவி ஒருத்தியைக் கழுத்தில் கட்டித் திரிவதை விடப் பாண்மகள் இட்ட பூமாலையே மனதிற்கு இயைந்ததாயிற்று" என எதிர் பகர்ந்ததற்கு அரசன், "சித்ராங்கா, எதிது, என்முன் நீ வாய்தந்தன விளம்பவும் வல்லையோ," எனக் கடிந்து தன் தம்பியிடம் திரும்பி, "எனக்கும் கருத்திதுவே, மற்றினி விராடா, அவ்விரு தலைவரும் இதற்குடன் படாவிடில் என்ன செய்வது?" எனவினவ, அவனும், "அரசே நால்வித உபாயத்தால் நானவரை உடன்படுமாறு ஆக்குவேன், கவலற்க" என்று கூறினான்.

இந்த விஷயம் முடிந்ததும் விச்வகேசரியரசன் சித்ராங்கனை மாத்திரம் நிறுத்திக்கொண்டு மற்றவர்களுக்கு விடை கொடுத்துவிட்டான். அவர் சென்றதும் அரசன் சித்ராங்கன் முகநோக்கி, "மைந்தா, நேற்றிரவு சாலியன் மனைச் சாளரத்தூடு சூறையாடச் சூழ்ந்ததார்? இவ்வூராரைப் பயப்படுத்தி ஆபத்திற் குள்ளாக்கிய தெவன்? சொல்வாய்!" என்றனன்.

"ஆபத்தொன்றையுங் கண்டிலன். எல்லாம் பயந்தான்......இருப்பினும், எந்தாய், இஃது இரவில் நகர சோதனை செய்யும் வேவுக்காரரைக் கேட்டாலல்லவோ தெரியும்."

"உன்னைச் சேர்ந்த ஒருவன் அவ்விடத்திலிருந்தான் என்பது தெரியலாயிற்று. அப்பாதகனுக்கு மரண தண்டனை விதிக்கப் போகின்றோம். அதுவும் கூட எமது சீற்றத்தினளவு எட்டவில்லை!"

"தேவரீர் சினத்திற்குப் பாத்திரனான எவனும் என்னைச் சேர்ந்தவனாகான்!"

"ஏ, சிறுவ, இந்தச் சித்திரப் பேச்செல்லாம் பயன்படாது. நேற்றிரவு நீ எங்கிருந்தாய்?"

"ஏன்! மன்மதன் புத்துயிர் பெற்றெழப் பிரார்த்தித்துக்கொண்டுதான் இருந்திருப்பேன்!"

"நல்லது, நரபாலன்?"

"நரபாலனா? அரசே, குற்றம் எதுவாயினும், எந்தாய், அது என்?த. நரபாலன் யாதும் செய்திலன்...... அவனுக் கிதன்பொருட்டு மரணதண்டனை விதித்தல் தகாது!"

"தண்டித்தல் என் பொறுப்பு. சித்ராங்கா, இதைச் சொல், நரபாலன் அங்கிருந்தானோ?"

"அங்கேயா, அவனா......இல்லவுமில்லை."

"அட பித்தா, பொய்யும்வல்லையோ! ஈன்ற தந்தைக்குப் பொய்பகரும் பேதாய், பார் இம்மோதிரத்தை. அதன் முத்திரையையும் பார்......அத்தீயோனது தலையைக்காக்க நின் தந்தையின் மாட்டே வாய்மை துறந்தாயே. யாரை நோவது! யானொருவன் செய்த பாவம் போதாது. எம் முன்னோர்செய்த தீவினை எல்லாம் நீயாகித் திரண்டதோ! புதல்வன் பெற்றேனல்லேன், பொய்யே பெற்றேன். பெற்றயான் உய்வதெங்ஙனம்! ஆதலால் மகனே நீயெனக்கு ஆற்றுமுதவி இவ்வாள் கொடு இன்றே என் புன்விதித் தலையைச் சீவி எறிவதன்றி யொன்றில்லை!" என்றரசன் உள்ளங்கரைந்து கண்ணீருகுத்துப் பீடமிசைச் சாய்ந்தனன்.



இளவரசனுக்கும் அடங்காத் துக்கம் மேன்மேலும் பெருகியது. கழிவிரக்கத்தால் மனம் புழுங்கினான் என்பதற்கு ஐயமில்லை. எனினும், விராடபத்ரனனைய தீமையே பூண்ட வஞ்சகர் அங்கு இருந்தாராயின், 'சொன்னபொய்யைச் சாதிக்கும் வகையில்லாது சாக்ஷியோ விரோதமாய் நிற்கின்றதே என வருந்துகின்றான்' என்று எண்ணுவது திண்ணம். சித்ராங்கன் தன் தந்தையின் அடிவிழுந்து முடிதோய்ந்து கண்வார்க்கும் நீரால் கழுவி, "என தாருயிர்த்தந்தாய், அன்னையு மாயினாய். இப்பிழை பொறுத்தி பொறுத்தி. மனுநெறி மறவா மாண்டவ! தீவழியறியாத் தூயகுலத்தோய்! பொறுத்தி பொறுத்தி! புல்லிய அறிவினேன் மடமையால் புகன்றது பொறுத்தி! என்பொருட் டொருவன் தலையிழக்கத் தரியா துரைத்தேன்! அருட்பெருங் கடலே பொறுத்தி ......" என்னப் பற்பல பன்னி அழுவானாயினான்.

அரசனும் மைந்தன் படுமவத்தைக்கு ஆற்றானாகி மனமொடு முகமும் இளகினன். இளகித் தரைதோய்ந்த தன்மகனைப் புல்லியெடுத்துக் கண்ணீர் துடைத்துத் தன்வயின் இருத்தி, "மைந்தா அழேல், சித்ரா அழேல், மகனே நின் கண்ணின்று ஒழுகிய இந்நீரால் மாசுதீர்ந்து கழுவிய மணிபோலாயினை," என்றவனை மார்புறத் தழுவி, "இந்நாள் எய்த நான் என்னோற்றேன்," என மகிழ்ந்து முன்னில் மிகுந்த கண்ணீர் வார்த்தான். சித்ராங்கனும் அவ்வாறே. சிறிதுநேரம் இருவரும் தத்தம் சிந்தனையுள் ஆழ்ந்தவராய் உரையொன்றும் ஆடாது கழித்தபின்னர் மன்னவன் மீண்டும், "சித்ராங்கா, பெருங்குன்றத்து இடுக்கண் களையும் வகையில் நீ வகுத்த சூழ்ச்சியால் உன்மதிநுட்பத்தை முன் கண்டேன். நின் ஏவலிற்செய்த பிழைக்காக நரபாலனைச் சிக்ஷிப்பது நீதியாகாதெனக் குறிப்புணர்த்திய நின் நியாயநெறியும் காண்கின்றேன். ஆயினும் மைந்த, அன்னவன் கேண்மையால் நீ கெட்டனை. இனியேனும் யானுவக்க அவனுறவு ஒழிப்பயோ?" என வேண்டினன்.

"ஐய, உமது ஆணைவழி நின்றேன்," என்று கூறிச் சித்ராங்கன் ஓலையொன்று தீட்டி நரபாலனுக்கு விடுத்திட அரசன், "குழந்தாய், இத்திருநாளைக் கண்டெனனுடன் மகிழ்வதற்கில்லாது நின்தாய் போயினளே. மைந்தா, நான் முடிதாங்கும் பெருமை யத்தனையும் இன்று நீ அளித்த உவகைக் கீடாகாது. எல்லாம் எம்பெருமான் செயல். குமர, வா, கோவிலிற்கு நாமிருவரும் சென்று கைகோத்து மனமிணங்கிக் கடவுளை வணங்குவோம்," எனவழைக்க, மைந்தனும் "அரசே, இன்றுடன் யான் சீர்பெற்றேன்" என்று தொழுது உடன் சென்றனன்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—பக்கம் 189)

### தனிப்பாடல்கள்

உள்ளுறை பொருளும் உள்ளுறை அணியும் தோன்றுமாறு கண்ணப்பர் கதையைப் பல புலவர் பெருமக்கள் பாடியது போலவே, உள்ளுறை சுவை தோன்றவும் பாடியுள்ளார். சிலர் நகைச்சுவை படக் கண்ணப்பர் கதையினைக் கூறி இறைவனை எள்ளி விளையாடுகின்றனர். இறைச்சி தின்றதனை இகழ்வார் சிலர்; செருப்பால் அடி பட்டதற்கு இரங்குவார் சிலர்; கண்ணப்பியது கண்டு அரைகண்ணன் என்று ஏசுவார் சிலர்; அடிப்போருக்கும் உதைப்போருக்கும் அருள் செய்யும் ஆண்டவன் என இழித்துப் பேசுவார் சிலர்; ஆனால் சிலர் அனைத்தும் அன்பால் ஆயிற்று எனச் சொல்லாமற் சொல்லிப் போவர்?

இறைவனார் இறைச்சி தின்றதனை எடுத்துப் பேச வந்த சிவப்பிரகாசர் "இறைச்சியை ஒழித்துவிட வேண்டும், அல்லாக்கால் எரிவாய்நிரயத் திடர்படுவீர்' என உலகத்தினர்க்கு உரைத்தருளினீர். நீரோ இறைச்சியை, வேடன் எச்சில்பண்ணித் தந்தாலும் இகழாது விரும்பியுண்டீர். அம்மட்டோ? இறைச்சியின் சுவையின் அருமையை அறிந்து அதனை உதவிய கண்ணப்பனுக்கு வீடும் அருளினீரே" என்கின்றார்.

"நீவிர்புல வருந்திலெரி நிரயத்தி லிடுவமெனத்
தேவவெமக் கியம்பினைநீ சிலைவேடன் இடும்பிசிதம்
ஆவலொடும் மிசைந்தவனுக் கருளினைமெய்க் கதி
[என்கொல்"

எனவரும் திருவெங்கைக்கலம்பகப் பாட்டு இறைவன் முன்பின் தெரியாது உளறினான் என்கின்றது. இந்தக் கருத்தையே திருவிடைமருதூர்உலா உடையாரும் கூறுகின்றார்.

மண்டுபுலால்
எங்கொடுக்க மாட்டாதென் றெங்கட்குரைத் தொரு
தாங்கொடுக்கும் போதெல்லாம் தானுண்டான்." [வர்

என்று பாடி இறைவன் தனக் கொருவழியும் பிறர்க்கொருவழியும் பேசிவைத்தான் என எள்ளி நகையாடுகின்றார்.

சிவப்பிரகாசர் பாடியதாக வழங்கும் மற்றொரு செய்யுளும் கண்ணப்பரைச் சுட்டுகின்றது.

விற்ற தார்கலை பாதியோடு
வனத்தி லேயழ விட்டதார்
வெஞ்சி றைப்புக விட்டதார்
துகிலு ரியவிட்டு விழித்ததார்
உற்ற தாரமும் வேண்டுமென்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ
உமிய டாமணம் என்றவாய்கிழித்
தோலை காற்றி லுருட்டடா
வெற்றி யாகிய முத்திதந்தருள்
வேங்கை மாநகர் வேடர்யாம்
விமல ரானவர் எமையடுத்தினி (து)
எங்கள் மிச்சில் பிசைந்தபின்
பெற்ற வேலர்த மக்குயாமொரு
பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்பரோ
இதென்பேய் பிடித்திடு தூதரே.

என்பதே அப்பாட்டு. மறம் என்பது கலம்பகத்தில் வருவதோர் துறை. நூலுக்குத் தலைமகனது ஊரில் வாழும் மறவர்களாகிய வேடர்களது மறத்தை (வீரத்தை) யும் சிறப்பையும் கூறுவதாகும் இத்துறை. தம் குடியைப் புகழ்ந்து அரசர் குடியை இகழ்ந்து அரசரினும் மறவர் மேம்பட்டாராதலின் அரசர்க்குத் தம் பெண்ணை மணம்

செய்து கொடுத்த லாகாதென அம்மறவர்கள் கூறுவதாகப் பாடுவது வழக்கம். அங்ஙனமே சிவப்பிரகாசர் வெங்கைக்கலம்பகத்தின் உள்ளுறுப்பாக அமைக்காவிடினும் அதனைச் சார்ந்ததாக அமைத்துள்ளார் இச்செய்யுளை. "அரிச்சந்திரனைப்போலத் தாம் மணந்த மனைவியை விற்றும், நளனைப்போலப் பெண்டாட்டியை ஆரும் துணையின்றி அல்லலாடும்படி நடுக்காட்டில் அவள் மானத்தைக் காக்கக் கட்டியிருந்த துணியிலும் பாதி அரிந்துகொண்டு விட்டோடியும், இராமனைப்போல வாழ்க்கைத்துணையை மாற்றான் ஊரில் சிறைபுகவிட்டும், மற்றொருவன் தமது மனையாளை இழுத்துப்போய் நாலுபேர் எதிரிலும் துகிலுரியப் பாண்டவர்கள்போல, வில்லும் தடியுமாய்த் தடியர்போல நின்று மானமின்றி மருள மருள விழித்து வாளா இருந்தும், வாழ்ந்துவரும் அரசர்கள் பெருமைபிதுவாக அவர்களுக்கு இனியொரு பெண்டாட்டியும்வேண்டுமா? அப்படிப் பெண்கேட்பதாய் இருந்தாலும் ஒப்புயர்வற்ற திருவெங்கையில் வாழும் வேடர்களிடத்தா கேட்பது. நாங்கள் எத்தகையோர்? எவ்வளவு ஒருமை உடையவர்கள்! எல்லோருக்கும் வீடு கொடுத்து ஒன்றும் வேண்டாது உயர்ந்த ஓர் இறைவனை எங்களது குடியின் பெருமையை அறிந்து எங்களோடு உறவாடி உயரவேண்டினான். ஒருபெண்ணை எங்கள் குடியிலிருந்தும் கொள்ளுவதற்கு என்னபாடு பட்டான். எச்சில் சோற்றில் விழுந்து, எங்கள் கண்ணப்பர் தமது எச்சில் குழையமென்று துப்பிய இறைச்சியை எல்லாம் ஒரு நாளுக்குப் பலநாள் தின்று எங்களை அண்டிப் பிழைப்பார்போல நச்சித் திரிந்ததால் எங்கள் மனமும் இரங்கியது. அவர் பெற்ற வேலருக்கு ஒரு பெண் கொடுத்தோம். ஆனால் நாங்கள் பெற்றெடுத்த பெண்ணைக் கொடுத்தோமா? நாங்கள் வள்ளிக்குழியில் கண்டெடுத்து வளர்த்த வளர்ப்புப் பெண்ணைத்தான் கொடுத்தோம். அங்ஙனமாகப் பெற்றபிள்ளையை யாரேனும் கொடுப்பார்களா? தூதர்களே நீங்கள் என்ன பேய் பிடித்து உளறுகின்றீர்களா. அடே! அஞ்சாது பெண் என்றுகேட்ட வாயைக் கிழித்தெறியுங்களடா! கொண்டுவந்த ஓலையைக் காற்றில் பறக்க விடுங்களடா" என வேடர்கள் கூறுவதாகப் பெருமிதச் சுவைக்குறிப்புத் தோன்றப் பாடியுள்ளார். இதிலே கண்ணப்பர் கதையைப் பயன்படுத்திக் கொண்டமுறை வியக்கத்தக்கது.

கண்ணப்ப நாயனார் இறைவனாரது திருமுடியில் இருந்தவற்றைச் செருப்பால் உதைத்துத் தள்ளியதை எண்ணி இறைவனை நோக்கி ஒன்று வினவுகின்றார் சிவப்பிரகாசர். இறைவனது திருமுடியில் என்றும் இடையறாது இனிது வீற்றிருக்கும் கங்கையும் கொன்றையும் திங்களும் பாம்பும், கண்ணப்பர் உதைத்தபோது என்னவாயின என்று கேட்கின்றார். தலைமீதிருந்த பாம்பானது வலிய வேடனது செருப்படியில் அகப்பட்டுச் செத்துப் பிழைத்து நசுக்குண்டதோ? இளம் பிறையானது நோய் பொறுக்கமாட்டாது ஒதுங்கி ஓடிப் பிழைத்ததோ! "இது என்னடா ஒரு வேடன் உதைக்கின்றானே" என்று கங்கையானவள் அருவருத்து முகஞ்சுளித்துக் கொண்டாளா? கொன்றைமாலை வேடனது காலிலே சிக்கிக்கொண்டு அவன் காலை அப்புறம் எடுக்க ஒட்டாமல் வலித்திழுத்ததோ! எனச் சுவைபட வினவுகின்றார்.

காணமல் அயன்தேடும் நின்மு டிக்கண்
கண்ணப்பன் தொடுகழற்கால் வைத்த போதில்
கோணகம் முரிந்ததுவோ குளிர்வெண் திங்கள்
கொழுந்துபொறு தொதுங்கிற்றோ நீர்ப்பெண் அன்பு
பூணமல் அருவருத்து நோக்கி னாள்கொல்
பொன்னிதழித் தொடையல்சூழ்ந் திழுத்ததோசொல்
வீணாள்பட் டழியாத அன்பர்க் கன்பாம்
விமலனே வெங்கைவரும் அமரர் ஏறே.

என்று தம் உள்ளுணர்வால் இறைவன் முடியில் என்ன என்ன நடந்திருக்கலாம் என்று கண்டுணர்ந்து புனைந்துரைத்துச் சுவைபடப் பாடியுள்ளனர்.

வசைபாடுவதில் வல்ல காளமேகன் கடவுளையும் விட்டான் இல்லை. புகழாப் புகழ்ச்சியாகப் பாடுவதில் வல்ல காளமேகனே முதலானோர் புனைவினில் புகழ்ச்சியணிவரப் பாடும்போதெல்லாம் கண்ணப்பர் கதையை மறப்பதில்லை. காளமேகம் தில்லையிற்சென்று சிவபெருமானைக் கும்பிட்டுக் கூத்தாடிப் போகையில் ஓர் பாட்டுப் பாடினான். சிவபெருமான் மிக்க ஏழ்மையாக இருந்து ஓடெடுத்து இரந்து ஒருவேளை உணவுக்கும் ஓரோடும் நிறையாமல் ஊரெல்லாம் உழன்று வருவதால்தான் கண்டவர் எல்லாம் அவரைக் கண்டபடி அலைக்கழிக்கின்றார்களாம். ஐயோ என இரங்குகின்றான். இல்லாக்கால் ஏதும்கெட்ட ஓர் பெண்பிள்ளையாகிய கங்கை ஆண்பிள்ளை என்றும் எண்ணாது தலைமேலேறிக் குந்தி யிருப்பாளா? கீழ்குடியிற் பிறந்த வேடனா கண்ணப்பன் செருப்பால் அடிப்பானா? சுந்தரன் பித்தா என்று வைவானா? அருச்சுனன் வில்லால் அடிப்பானா? என்று தான் சொல்லியதை நிலைநாட்டுகின்றார்.

தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறாளோ [ருவன்
பூண்ட செருப்பால் ஒருவன் போடானோ—மீண்டொ
வையானோ வின்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னால்.

என்று கண்ணப்பர் செருப்படியால் உதைத்ததும், இறைவனது ஏழ்மையால்தான் எனத் தற்குறிப் பேற்றமாகப் பாடிப் போகின்றார். அன்பர்க்காக என்ன பாடும் பாடுவான் எனக் குறித்தும் போகின்றார். இப்பாடலில் உலக வழக்கில் வழங்கிவரும் "என் தலைமேலே ஏறுகிறாயே", "போட்டான், மாட்டினான்" என்ற சொற்றொடரையும் சொற்களையும் அழகுறப் பயன்படுத்தியமை உற்று ஆராயத் தக்கது.

இவ்வாறு கண்ணப்பன் செருப்பால் அடிபட்டதற்கு மற்றோர் தற்குறிப்பேற்றமும் கூறியுள்ளான். கல்லாலும் வில்லாலும், கைப்பிரம்பாலும் கண்ணப்பன் செருப்பாலும் அடிபட்டதேன்? ஏன் என்று கேட்க ஒரு தாயோ தந்தையோ இல்லாத குறையால் அல்லவா? என்று இரங்குவதுபோல இறைவனது முதன்மையை எடுத்து மொழிகின்றான்.

வில்லால் அடிக்கச் செருப்பால்
உதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால்
அடிக்கவிக் காசினியில்
அல்லார் பொழில்தில்லை அம்பல
வாணர்க்கொ ரன்னைபிதா
இல்லாத தாழ்வல்ல வோஇங்ங
னேஎளி தானதுவே

என்று "தாயில்லாத பிள்ளையா தலைமேலடிக்க" என வழங்கிவரும் பழமொழியை ஒட்டிப் பாடினான்.

இக்காளமேகமே திருவிடைமருதூருக்குச் சென்று கடவுளை வழிபட்டு வருகையில் இந்த முறையில் மற்றோர் பாடலும் பாடியுள்ளான். "சிறுத்தொண்டன் இட்ட பிள்ளைக் கறியும் தின்றீர்: கொள்ளத் தக்கன தள்ளத் தக்கன என ஆராயாது கண்ணப்பன் எல்லா விலங்குகளையும் கொன்று கிழித்துச் சுட்டுக் காய்ச்சிக் கொணர்ந்து தந்த கறி எல்லாம் சீராகத் தின்றீர். இவை எல்லாம் போதாதா? இன்னும் அந்தோ பன்றிக்குட்டியின்மேலும் (பன்றி உருவெடுத்த திருமாலின் மகனான மன்மதன்) வேணவாகொண்டு தீய்த்துவிட்டீரே. ஈதென்னே உமக்குப் புலால், உணவில் இருந்தஆர்வம்", என்று பாடுகின்றான்.

கண்ணன் இடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரான்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றாதோ—தண்ணோடு
மட்டியையும் சோலை மருதீசரே பன்றிக்
குட்டியையேன் தீத்தீர் குறித்து.

என்று கடவுளது கன்மனத்தைக்கண்டு இகழ்வதுபோலப் பாடுகின்றான். கண்ணப்பிய பெருமைபற்றிக் கண்ணப்பரைக் கண்ணன் என்றே இங்கு வழங்கியமை பாராட்டற் பாலது.

திருவானைக்காவில் சென்றிருந்தபோது சிவபெருமான் நஞ்சுண்டதனை வேறு வகையாகத் திரித்துப் பாடி இன்பூட்டுகின்றான். "நடவுளே கல்லாலும் வில்லாலும் அடிபட்டும் கண்ணப்பர் செருப்பால் உதைபட்டும் ஒன்றியாய் நின்றீர். இந்தக் கீழ்நிலைமைக்கு வெட்கி உடல் குன்றினீர்; மானம் விட்டபின் வாழாமை முன்னினிதே எனத் துணிந்து நஞ்சுதின்றேனும் சாகலாம் என நஞ்சுண்டீரோ? என்று வேடிக்கையாக வினவுகின்றான்.

கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதில்ஆனைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் நாள்.

எனச் சிவன் நாணமடைந்து நஞ்சு தின்றதாக இரங்குகின்றான்.

மற்றொரு காலத்திலே சொல்லுகின்ற போக்கிலே சுவைபிறக்க ஓர் பாட்டுப் பாடுகின்றான் நமது காளமேகம். திருமாலே மாடாகி வந்து சிவபெருமானைத் தாங்குகின்றார் எனச் சிவன்கதை செப்பும். சிவனாரது திருமாடாம் திருமாலுக்கு உகந்த பெரிய கோயிலாய் இருப்பது திருவரங்கம் ஆதலின் அதுவே சிவனது மாட்டுக் கொட்டில். திருமறைகளைக் குதிரையாகப் பூட்டித் தேரோட்டினான் மூவெயின் முருக்கிய மூரண்மிகு செல்வன். அவ்வாறு குதிரைகளான திருமறைகளோ மலரவனது வாயின் நின்றும் வந்தவை. ஆதலினால் பிரம்மனது வாயே சிவனது குதிரைகட்டும் இலாயம். கண்ணனார் சிவனைத் தொழுகையில் ஓராயிரம் பூவில் ஒரு பூவானது குறையத் தயங்காது தன் கண்ணையே மலராகச் சிவபெருமான் திருவடியில் இட்டார். ஆதலின் அக்கண்மலர் பூக்கும் பொய்கை கண்ணனாரது திருமுகமே. சிவபெருமான் சிறுத்தொண்டரது மகன் கறியைத் தின்ன வந்தவர் அல்லவா? சீராளன் கறிகாயானால், அக்கறிகாய் வளரும் தோட்டம் அவனது தாய் வயிறேயாகும். தில்லையில் சிவபெருமான் கூத்தாடுவதாலே அவ்வம்பலமும் அவரது கூத்து மேடையாகும். மடைப்பள்ளியிற் சமைத்து மென்மையாக்குவதுபோலக் கண்ணப்பனார் தாம் கொண்டுவந்த இறைச்சியினைத் தம் வாயில் இட்டு மென்று மென்மையாக்கித் தந்தனர் ஆதலினாலே அவர் வாயே சிவனாரது மடைப்பள்ளியாகும்.

ஏறுகட்டிய கொட்டில் அரங்கமே
ஈரிரண்டு முகன்வாய் இலாயமே
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த ஓடை திருமால் வதனமே
வீறு சேர்சிறுத் தொண்டனில் லாளுந்தி
வேட்டநற் காய்க்கின்ற தோட்டமே
நாறு பூம்பொழில் சூழ்தில்லை அம்பல
நாரி பாகற்கு நாடகச் சாலையே.

என்று அழகாகத் தாம் சொல்லும் பொருளை நேராகக் கூறாது விளைத்துப் புதுமை தோன்றக் கூறியுள்ளார்.

T. P. மீனாக்ஷி சுந்தரன்.

---

# அரசியர் மலர்வன மல்லிகை

## John Ruskin's
## Lilies of Queens' Gardens.

(197-வது பக்கத் தொடர்ச்சி.)

18994

இவ்வினையில் நாம் புகுமுன், இதுவரை எவராலும் முடிவு செய்யப்படாத மற்றொரு ஆழ்ந்த கேள்வியொன்றும் நம்முன் தோன்றுகிறது. பெண்கள் பெறவேண்டிய ஆட்சிவன்மை எத்தகையதாயிருக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்யுமுன் அவர்கள் மாட்டு இயற்கையாயமைந்துள்ள சக்திதான் என்ன தன்மையது என்று நாம் தேர்தல்வேண்டும். பின்னது துணியா முன்னம் முன்னதின் முடிவுகாணல் அரிதாகும். இஃதேபோல் அவர் இல்லத்தில் ஆற்றவேண்டிய உண்மையான வினையெதுவெனத் தேராமுன் வெளியிடத்தில் தன் கடனாற்றக் கல்வி எப்படி யவர்கட்குத் துணையாகுமெனக் கருதுதலு முடியாது, அறிவீர். குடும்பத்தின் நன்மைக்கும், சமூகத்தின் நல்வாழ்விற்கும் இன்றியமையாததான இவ்விஷயத்தைப்பற்றி நாம் இந்நாள் இடைவிடாது பயனற்றவாறு பேசியும் எழுதியும் காலங்கழித்து வருவதுபோல் இதற்குமுன் என்றும் செய்ததில்லை. ஆண் பெண் இருபாலார் தம்முள் நின்று வரும் தொடர்பையும் இயற்கைக் குணங்களையும், வேறாயமைந்த மனதின் போக்கையும், தன்மையையும் எழுதியும் பேசியும்வருபவர், அபிப்பிராய பேதமின்றி இதுவரை யார் அளவுகண்டார், யாருமிலர். மாதர் உரிமையென்றும், பெண் கல்வியென்றும், மானிடச்சாதிக்குஅவர் செய்யும் வினையொன்றுளதென்றும், ஆடவரினின்றும் வேறுபட்ட வாழ்க்கையாகித் தனியான பற்றுதலும் அவர்கள் உடையார்போல் கூறப்படும் சொற்கள்சில நம் காது துளைக்கின்றன. மாதரார் வாழ்க்கையும் வேறு, பற்றுதலும் வேறு என்னும் வரையிலாவது இச்சொற்கள் தவறானதாகவேண்டும். மற்றுப் பெண்ணோ அவள்புருஷனின் சாயையென்றும், தனக்கென்றோர் உரிமையொன்றும் பெற்றிலாது நாயகன்தன் ஆண்மை வலியால் காக்கப்பெறும் பதுமையென்றும் அடிமையென்றும் கூறுவார் ஒருசாரார். இக்கூற்று முன்னதினும் பெருத்த தவறாகும். செயலற்ற அடிமையும், உயிர்ப்பொலி வில்லாச் சாயலுந்தான் நம் வாழ்க்கையில் துணைநிற்க வல்லமாதரோ, சொல்வீர்!

இனி நாம், ஆடவர்க்கும் பெண்டிற்கும் உள்ள உண்மைத் தொடர்பும், இருவரும் ஏற்றந்தாழ்வென்ற

கொள்கை விடுத்துச் சந்துபட வாழ்க்கையில் பொருந்தின் அதனால் ஏற்படும் நலனும், அந்நலந்தரும் வன்மையும், சீரும் சிறப்பும் எத்தகையன என்று ஆராய்ந்து முடிவொன்று காண முயல்வோம்.

இந்நிலையில், நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைத் தொடர்ந்து ஆராயப் புகுமுன், முன்னம் நான்செய்தவொரு பிரசங்கத்தில் கூறியவொன்றை மீண்டுமொருமுறை உங்களுக்கிங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நமது வாழ்க்கையில் வழிகாண முடியாத நிலை சில வந்து தோன்றுங்கால் அந்நிலை போக்கி வாய்மையை அறிவதற்கு, உயரிய தத்துவநிலையில் வாழ்வு நடத்திய ஆன்றோர்களை நாடுமாறு செய்தலே கல்விப் பயிற்சியால் நாம் பெறும் பயனெனக் கூறினேன். நம் மனத்திற்கு விஷயத்தின் வாய்மை எட்டாத காலத்து, நம்மினும் பன்மடங்கு விரிந்துயர்ந்த நோக்கும், சித்திரக் கண்ணும், சிருஷ்டியில் கலந்த மனமும், காலங்கடந்த அறிவின் ஆற்றலும் படைத்த பேராசிரியர்களிடம் சென்று, நாமடைந்த ஐயம் கூறி, கண்களுக்கு விளங்காப் பொருளையும், பொருளின் தத்துவத்தையும் அன்னார் நூல்களின் மூலமாய்க் கண்டு, வக்கீலும் நீதிபதியுமான அவர்களது காலதேச வர்த்தமானங்களால் கட்டுண்ணு முடிவைத் தெரிதலே, புத்தகங்களைச் சரியான வழியில்உபயோகப்படுத்திக் கொள்வதாகும்.

நாமும் இப்பொழுது அவ்வாறே செய்வோம். அறிவிலும், திருஷ்டியிலும் குணநலத்திலும் மிகமிகச் சிறந்தோரான பெரியோர், இன்று நாம் கருதி முடிவு தேடுதற்கு எடுத்துக் கொண்ட விஷயத்தைப்பற்றி ஏதாவது ஆய்ந்தறிந்துரைத்துளரோ? உளர் எனின் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அமைந்த தொடர்பு எத்தகையது? ஒருவருக்கு மற்றவர் ஆற்றும் உதவியின் இயல்பும், அவரவர்க்குரிய இடமும்பற்றி என்ன கூறியுள்ளார், பார்ப்போம். அதுவேதான் படித்தவர் செயலும் முறையுமாகும்.

முதன் முதலாக ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் பெரும் புலவர்பாற் செல்வோம். அவர் சித்திரக் கற்பனையிற் பிறந்த இருபாலாரிலும் மாதரே உயர்ந்தவர் என்னும் வாய்மையை அன்னார் நூலைப் படித்தவர் ஏற்பர் என்றே எண்ணுகின்றேன். நிறையிலும் நலத்திலும் தன்னினைவிலாக் கருணையிலும், தியாகத்திலும் சிறந்த மாதர்கள் இல்லா நாடகத்தையே அவரியற்றக்காணோம் ...கர்டீலியா, டெஸ்டிமோனா, இஸபெல்லா,ஐமொஜன், ரோஸலிண்டு முதலாயினோர் மங்கையர்திலகமாகாரோ? பிறப்பிலேயே பெருமையுடையவர்கள் பெண்கள் என்பதை நமக்கு அறிவுறுத்தத்தான் அக்கவி நாயகன் இம்மாதர்களைக் கற்பித்துள்ளான் போலும்... இனியும் பார்ப்போம். ஷேக்ஸ்பியர் ஆக்கிய ஒவ்வொரு நூலிலும், அழிவிற்கும் நாசத்திற்கும், ஆடவன்தன் சிறுமையும், அறியாமையும், மெய்ச்சோர்வும்,தவறுமே காரணமாகும். கெடுவது தவிர்ந்ததெனின் அதற்கு மாதொருத்தியின் நல்லறிவும், திறமையோடு சேர்ந்த ஒழுக்கமுமாகும். சீரிய நங்கை யொருத்தியிடைப்புகாது ஆடவன் திறமையால் நாசம் தவிர்ந்ததென்பதை நாடகமனைத்திலும் மருந்திற்கும் காண்பதரிதாகும்,... ஆனால் ஒன்று. ஷேக்ஸ்பியர் நாடகத்தில் திறமையில்லாப் பேதைப் பெண் ஒருத்தி யிருக்கிறாள். அவள்தான் ஒபீலியா. காதலன் ஹாம்லெட் தன்னெஞ்சத்தில் எழுந்த சஞ்சலம் பல அவனை அலைக்கச்செய்வினை தெரியாது தவிக்குங்காலை அவனுக்குத் துணையொன்றும் செய்யாது, அவ்வெள்ளைப் பெண் தகப்பன்தன் கைப்பொம்மையாய் விலகி நிற்கவே வந்துற்றது நாசமெலாம், என்பதை யறியீரோ?... மக்பத்து, ரீகன் கானரில் என்ற கெட்ட பெண்களும் இருக்கக் காண்கிறோம். அக்கேடுகெட்ட பெண்கள் இயற்கை விதிக்கு மாறுபட்ட அச்சந்தரும் விபரீதங்களே ஆவார்கள். எனவே தீமையிலும் இப்பெண்கள் தலைசிறந்தனர்.

வாழ்க்கையில் மாதர்க்குரிய இடமும், அன்னவர் தன்மை இதுவென்றும் ஷேக்ஸ்பியர் நமக்கு விளக்கித் தருவது இதுவேதான். ஆடவர்க் குற்றதுணை பெண்கள் என்றும், வந்துறும் அழிவைத் தடுக்க இயலாத காலத்தும், அழவிற்கு இழிவொன்றும் ஏற்படாது காத்தளிக்கும் இயல்பினர் அவர் என்றும், மானிடச் சாதியே தானேயாய், மாந்தர்தம் உள்ளந்தோறும் அலகிலா வடிவிற்றோன்றி மாந்தர் இயலையும், மனத்தின் போக்கையும், மானஸதத்துவ நுட்பத்தையும் உள்ளவாறுணர்ந்த பெரியோன் ஷேக்ஸ்பியர் தன் நூலின்கண் காட்டித் தருவதை நோக்குமின், தெரியவேண்டின்.

பெரும் புலவன் ஷேக்ஸ்பியர் நிற்க மற்றவர் மாட்டும் நாம் விரைவின் அணுகுவோம்,வாரீர். மாந்தர் இயல்பின் நுணுக்கத்தின் அறிவிலாவது, ஊழின் காரிய காரண உணர்விலாது முன்னவன் வீற்றிருக்கும் இடத்திற்குக் காதத்திற்கப்பாலும் நிற்கவியலா தானாலும், மக்கள் நிலை, மனத்தின் போக்கு இவைதம் பொதுவிதியின் நுட்பத்தை யறிந்துள்ள ஸர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்னும் ஆசிரியன் நமக்கு எவ்விதத்தில் துணை செய்வான் என்று பார்ப்போம். அவனது கற்பனை உரைநடைநூல் சில (Romantic Prose) நமது கருமத்திற் கேற்றவை யல்லவென்று ஒதுக்கி விடுகின்றேன். அவனது ஆரம்பப் பாடல்கள் அழகு நிரம்பியவைதான், என்றாலும், ஒரு பள்ளிப் பையனது உயர்நோக்கிற்கு (School-boy's Ideal) மேலதான தத்துவமெதையும் தன்பால் கொண்டதில்லை. அவர் ஸ்காட்டுலாந்து மக்களது வாழ்க்கையையும் வாழ்வின்போக்கையும் ஆய்ந்தறிந்ததின் பயனாகப் பிறந்த அவரது நூற்கள் பல பெரும்பயனும் விடையும் நமக்குத் தருவதாகும். ஸ்காட் அவர்களின் நூலனைத்திலும் செயற்கரிய செய்த உயரிய ஆடவர் டாண்டி டின்மாண்ட் (Dandie Dinmont),ராப்ராய்(Rob Roy),கிளேவர் ஹௌஸ் (Claver House), என்பவர்களே. இவர்களில் ஒருவன் குடியானவன், ஒருவன் வழிக்கொள்ளைக்காரன், கடைசியவன் கெட்ட காரியங்களுக்குத் துணை நிற்பவன். இம்மூவர் அடைந்த பெருமையாவும்,அவர்பெற்ற உடலுரத்தாலும், மனவுறுதியாலும், அஞ்சாத் தன்மையாலுந்தான். அவர் நூலிடைப் பிறந்தலவு : மற்றவர்களோ, விதியின் விளையாட்டுப் பிள்ளைகளே யாவர். அவர்கள் கருமம் துணிவதும், துணிந்ததைச் செய்வதும், வெல்வதும் விதியின் செயலேயாகும். முதிர்ந்த அறிவால் செயற்கரிய கருமம் வகுப்பதும், வகுத்ததைச் செய்யும் ஆர்வமும், பகையெனவரும் தீமையை அகற்ற முன்னணியில் நிற்பதும் போன்ற குணச் சிறப்பை ஸ்காட்டின் கற்பனையில் பிறந்து வினை செய்யும் ஆடவரிடம் காணல் முடியவில்லை. ஆனால் அவர் கற்பனை யரங்கினில் நடமாடும் கொடியன்னார் மனங்கவரும் சாயற்பொலிவும், உள்ளக் கருணையும் அறிவின் ஆற்றலும், எந்நிலையிலும் வாய்மைவழி நிற்கும் நேர்மையும், இது கடமைதானோ என்னும் சிந்தனையில்லாத் தன்னலமறுக்கும் தியாகமும், தனதன்பன் செய்யுந் தவறுகளை விலக்க முயல்வதால் அவனை மனநோகக் காண்பதினும், பொறுத்திருத்தலே முறையென விருக்கும் பேறிவும், தன்னடக்கமும் யார் மனதைத்தான் கவராதொழியும்!...... இம்மங்கையரின் பேறிவு தகுதியற்ற காதலர்களின் குணத்தை மெல்ல மெல்லப் பண்படுத்தி உயர்த்திக் கடைசியில் அவர் இன்



னல் களைந்து பொருந்தா வெற்றியும் தருவதை நாம் சில சமயம் கேட்க, இவனுக்குமா வெற்றி என்று சிறிதளவு பொறுமையும் இழக்க நேரிடுகிறது. இத்தகையார் இந்நூலின்கண் நாம் காணும் தன்னலம் துறந்த மாதரார்.

ஆகவே ஷேக்ஸ்பியர்போலவே ஸ்காட்டின் நூலிலும் மனம்போன போக்கெல்லாம் போகும் காளையர்கட்குக் காப்புமாய் மனச்சோர்வு ஏற்பட்டகாலை ஆறுதலளிக்கும் ஆசிரியருமாய் அமைகின்றனர் மங்கைமார். இத்தொழிலை மாதர்மாட்டுத் தவறியும் ஆடவர் கொண்டதாகத் தெரியவில்லை... இத்தாலிய,கிரேக்க நூலாசிரியர்களும் பெண்ணையே சிறப்பித்துள்ளனர். தாந்தே (Dante) என்னும் பெருங்கவி, தமது செத்து மடிந்த காதலியின் ஞாபகார்த்தமாகச் செய்த நூலொன்றில் மேலுலகு நின்று தன்னை இடைவிடாது மனைவியின் ஆன்மா காத்துவருவதை மனமுருகிக் கேட்பவர் மனமுமுருகப் பாடுவதை அறிவீர்... அல்ஸெஸ்டிஸ் என்னுமொரு மாது தன்கணவன் உயிர்காக்கத் தன்னுயிரை யளித்த பெருமையை அறியீரோ? நேரமிருப்பின் இவ்வண்ணம் ஒன்றன்பின்னொன்றாகப் பெரியோர் பலர் பெண்களைப்பற்றிக் கூறியுள்ளதைக் கூறிக்கொண்டிருக்கலாம். ஆனால் கற்பனை உலகினில் உலவிப் பார்ப்பதை இனி நிறுத்துவோம். உலக இயலை நன்கறிந்த இப்பேரறிஞர் கூற்றிற்குரிய மதிப்பின் தகுதியைத் தருமாறே நான் உங்களை இப்பொழுது கேட்கின்றேன்.

அல்லலேயான இவ்வாழ்க்கையில் பொழுது போக்காக அவர் கற்பனைத் திறத்தால் புனைந்த வாய்மையற்ற வீண் கதை யிதுவென எண்ணுவீர்களோ, கூறுங்கள். "ஐய இது சோம்பலிற் பிறந்த பொய்மை. கற்பனையேயானாலும் உலக நடைக்கு ஒரு சிறிது பொருத்தமுளதாயின் ஒருவாறு ஏற்கவும் ஏற்கலாம். இக்காலம் நாம் காணும் வாழ்க்கையைப்பற்றிய, நமது பொதுக்கருத்துக்கும் அன்னார் காட்டும் வழி முரண்பாடுள்ளதாய் அமைந்துள்ளது. எனவே நாம் விரும்பி ஏற்கத்தக்கதாயில்லை அவர் கூறும் வாழ்க்கைத் தத்துவம். கருமம் துணியவும் ஏற்றவரல்லாப் பெண்கள் எங்ஙனம் நமக்கு வழித்துணைவராயிருத்தல் முடியும். மனிதனே சிறந்தவன் அறிவிலும், ஆற்றலிலும். கருமந் துணியவும், துணிந்ததைச் செய்யவும், ஆளவும் தகுந்தவன் அவனே" என்பது உங்களது எண்ணமோ? கூறுவீர். (தொடரும்)

K. இராஜகோபாலன்

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 3. நகரப் படலம்.

புலிக்குமுடி யுண்டு புறவிற்கோ ரூடலுண்டு.

ஒரு செய்தியை வருணிக்கத் தலைப்படுகின்ற கம்பர், இன்ன இன்னதைத் தொன்றுதொட்டு வருகின்ற வழக்கப்படி இந்தஇந்த உவமங்களால், இதற் கித்தனை பாட்டென்று, சொல்லி முடிக்கும் சாதாரணக் கவியல்லர். எதனைச் சொல்வதென்றாலும் உடனே அவர் மனக்கண்களின்முன் அதன் சித்திரம் பூர்த்தியாய் சிருஷ்டியாகியெழுகின்றது. அது அவர் கவிமனதின் திறம். தன்முன் நிற்கின்ற இச் சித்திரங்களைக் காட்டிக்காட்டி நம்மையும் காணும்படி செய்கின்றனரே யல்லாது அவர் வாயால் வருவதை நம் காதால் கேட்கின்ற அளவோடு ஒரு நாளும் அமைவதில்லை. கோசல தேசத்தூடு நம்மை அழைத்துச்சென்ற புலவர் அயோத்தியை நோக்கி வரும்போதே மெள்ளமெள்ள அந்நகரின் திவ்வியத் தோற்றம் அவர் கவிக் கண்களுக்கு முன்னே எழுவதாகின்றதென்பதற்கு வருணனையில் அவர் விஷயங்களை முன்பின் வைக்கின்ற முறையே சான்றாகும். தூரத்திலிருந்து ஒரு நகரைக் கருதி வருபவர்க்கு மதிலே முதலில் தோன்றுமாதலால் அதனைத்தான் முதலில் கூறினார். அதற்கு முன்னால் இருப்பது அகழியானாலும், சமீபித்த பிறகே அது கண்ணிற்குத் தோன்றும். ஆதலால் அகழியைப்பற்றிப் பிறகு கூறுவர். கண்ணாற் காணாது சொல்லால்மாத்திரமே வருணிக்கு மேனையவர் வரிசை தவறமாட்டார். சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவர் இராசமாபுரத்தை வருணித்திருப்பதையும்,கம்பர் இங்கு அயோத்தியை வருணிப்பதையும் ஒப்பு நோக்கினால் இதனுண்மை தெரியவரும். திருத்தக்கதேவர் தன்னகரத்தைத் தாமும் கண்டதில்லை; பிறர்க்குங் காட்டவில்லை. நகருக்கு அகழி முதலிலும், அப்புறம் மதிலும் சோலையு மிருக்குமென்று அவருக்குத் தெரியும். ஆதலால் அவ்வறிவைக் கொண்டு முதலில் அகழியைப் புகழ்ந்து பிறகு மதிலைச் சொல்லிச் சோலையைச் சொல்லிக்கொண்டு போகின்றார். இந்த நூலைக் கம்பர் நன்றாகக் கற்றிருக்கின்றார் என்பதற்கு ஐயமில்லை. இவ்விரண்டிலும் இருக்கின்ற சில செய்யுட்களைக் கொண்டு, சிந்தாமணியின் இப்பாகத்தைப் பின்னுமொருமுறை படித்துவிட்டுக் கம்பர் தனது நகரத்தைப் பற்றி எழுதத் தலைப்பட்டிருக்கின்றா ரென்றெண்ணவும் இடமுளது. இருப்பினும் கம்பர் அம்முறையை மாற்றி மதிலை முதலிலும் அகழியை அடுத்தும் வருணிப்பதற்குக் காரணம் எதுவென்று அவரையே கேட்டாலும் சொல்லமாட்டதவரா யிருப்பாரேனும், கருத்துட்கண்ட காட்சியையே தொடர்ந்து புகல்கின்ற தன்மையராதலால் இம்மாறுபாடு நேர்ந்ததென்று நாம் உணரக்கூடியவரா யிருக்கின்றோம்.

ஆயின், அயோத்திமா நகரின் மதிலைப் புறத்தே சூழ்ந்திருந்த அகழியையும் காணுமாறு இப்பொழுது அருகினில் எய்தியுள்ளோம். கண்ணாற் கண்டவளவிலே தன்மையைத் தெரிந்துகொள்ளக்கூடிய பொருள்களைக் காட்டு மொருவர், "இது மகா பெரியது, ஆழமானது, இதனைக்கடந் தப்புறம் போவது சுலபமன்று." என்று சொல்லிவருவது பயனில பேசுவது ஆகும். கம்பர்பால் அக்குற்றம் காண்பதற் கியலாது. கண்ணில் தெரிவனவற்றை ஆதாரமாகக்கொண்டு மனதால் உணர்வதற் கியன்றனவற்றை நினைப்பூட்டுபவராய் விபரீத உவமைகள் கொண்டு அகழியை வருணிப்பார்:—

அன்னமா மதிலுக் காழிமால் வரையை
யலைகடல் சூழ்ந்தன வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப்
புன்கவி யெனத்தெளி வின்றிக்
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும்
படிவருங் காப்பின தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங்
காத்தது நவிலலுற் றதுநாம்.

[சக்ரவாளகிரியைச் சூழ்ந்த சமுத்திரத்தைப்போல் அந்த மதிலிற்கு அமைந்த அகழியானது, வேசியர் மனம்போல் அறியமுடியாத ஆழத்தையுடையதாய், அற்பக்கவிகளைப்போல் தெளிவிலாமல் கலங்கி, கன்னியர்

களைப்போல் யாவருக்கும் எய்த இயலாத காவலைப் பெற்று, நல்லநெறியில் செல்லவொட்டாமல் விலக்கும் ஐம்பொறிகளைப்போல் அலைகின்ற முதலைகளை உடையது. நாம் சொல்லும் அகழி இத்தன்மையது.]

இச்செய்யுளிற்கு நேராகச் சிந்தாமணியில் ஒரு செய்யுள் இருக்கின்றது. அதுவே கம்பருக்கு இச்செய்யுளிற் கண்டகருத்தை அளித்திருத்தல் வேண்டும் :—

பட்டவர் தப்பலிற் பரவை யேந்தல்குல்
அட்டொளி யரத்தவாய்க் கணிகை யல்லது
மட்டுடை மணமகண் மலர்ந்த போதினுல்
கட்டுடைக் காவலிற் காமர்க் கன்னியே.

[அகப்பட்டவரைக் கரையேறவிடாமல் அழுத்திவிடுவதில் அவ்வகழி, உருக்கிய அரக்கைப்போன்று ஒளிரும் வாயுடைய வேசியரை ஒக்கும். அது தவிர, மலர்ந்த பூவினுல் மணம்செய்த குலமகளை ஒக்கும். கட்டுள் அடங்கிய காவலால் அழகிய கன்னியை ஒக்கும்.]

பரத்தையர் பருவமனைவியர் கன்னியர், ஆகிய மாதர் மூத்திறத்தோரையும் சிந்தாமணி அகழிற்கு ஒப்பாக எடுத்தாண்டபோதிலும், நடு உவமையைச் சிறிது விரசச் சிலேடையென்று விலக்கிவிட்டுக் கம்பர் மற்ற இருவரையே தனது செய்யுளிற்கு ஏற்றதாக அமைத்துக்கொண்டார். இவையிரண்டு மல்லாமல் கம்பர் செய்யுளில் பின்னும் இரண்டு உவமைகள் வந்திருக்கின்றன. அதனில் ஒன்றினுல் புன்கவிகளின்மீது தனக்கிருக்கும் வெறுப்பைத் தீர்த்துக் கொள்கின்ருர் ; மற்றதால் முன் மதிலிற்குச் சொன்னவோர் உவமையை முடித்து வைக்கின்ருர். ஈசன் எய்துவதற்கு அருமையாதல் அவன் குற்றமன்று. நன்னெறியினின்று விலக்கிப் படுகுழிப் பாய்ச்சும் இந்திரியங்களின் வாய்ப்படுதலால் இறைவனை எய்துவதற்கு இயலாமற் போகின்றது.

மதிலை மலையென்றும் அகழை ஆழ்கடலென்றும் சொல்லியதற்கேற்ப இவ்விரண்டினையும் மேகத்தைக்கொண்டு பிணைத்து வைத்து மயக்கவணியால் வருணிக்கின்றது இதற்கடுத்த செய்யுள் :—

ஏகுகின்ற தங்கணங்க ளோடுமெல்லை காண்கிலா
நாகமொன் றகல்கிடங்கை நாமவேலை யாமெனு
மேகமொண்டு கொண்டெழுந்து விண்டொடார்ந்த [குன்றமென்
ருகநொந்து நின்றுதாரை யம்மதிற்கண் வீசுமே.

[ஆகாயத்தில் போகின்ற மேகக்கூட்டங்கள், எல்லையற்று அகன்றும் நாகலோகம்வரையில் ஆழ்ந்தும் இருக்கின்ற அவ்வகழியைக் கடல் என்று எண்ணி, இறங்கி வந்து நீர்குடித்து, அயல்நின்ற மதிலையும் விண்ணளவு வளர்ந்த மலையென்று மயங்கி மெய்வருந்த அதன்மேல் ஏறி மழையைப் பொழிந்துவிடும்.]

மேகத்தின் அறியாமையையோ மற்று, மேகம் மதி மயங்கிப் போயினுல் யாது செய்யும் என்று நினைக்க வல்ல கவியின் அறிவையோ, வியப்பது!

சிந்தாமணிச் செய்யுளின் மூன்ருவது அடியில் அகழின்கண் மலர்கள் இருந்ததைக் குறித்த கருத்தையும் கம்பர் விட்டுவிட வில்லை. அயோத்திநகர் மாதரின் அழகால் விளங்குகின்ற அளவு வானவருலகு விளங்கிற்ருே இல்லையோ என்று ஒப்புநோக்குதற்கு மதில் விண் புகுந்துபார்த்தது என்று முன் மதிலைக்கொண்டு அம்மாநகர் வைகிய மாதரின் நலப் பெருமையைக் குறிப்புணர்த்திய கம்பர்மீண்டு மிங்கு அகழியின் உதவியால் அதேகாரியத்தைச் செய்வார். எவ்வாறெனில்,

அந்தமா மதிற்புறத் தகத்தெழுந் தலர்ந்தநீள்
கந்தநாறு பங்கயத்த கானமான மாதரார் [பெலாம்
மூந்துவாண் முகங்களுக் குடைந்துபோன மொய்ம்
வந்துபோர் மலைக்கமா மதில்வளைத்த மானுமே.

[அந்தப் பெரிய மதிலிற்கு வெளியேயுள்ள அகழியில் பூத்த மணங்கமழும் தாமரைக் காடானது, உள்ளிருக்கும் மாதர்களுடைய முகத்திற்குத் தனித்தனி அழகில் தோல்வியுற்று ஓடிவிட்ட மலர்களெல்லாம் இப்பொழுது ஒன்று சேர்ந்த பலம் பெற்று மறுபோர்க்கழைத்தனவாய் வந்து அம்மதிலை முற்றுகை போட்டிருப்பதை ஒக்கும்.]

என்று பங்கயத்தைப் பழித்த பாவைமார் முகச் செவ்வியைக் காட்டினர்.

அகழைக்கடப்பதற்கமைந்த இழுவைப்பால மொன்றினை நண்ணியகாலையில் நகரவாயிலும் அதன்மேலெழுந்த கோபுரத்தின் பெருமையும் நம் கண்ணையுங் கருத்தையும் கவர்ந்து சற்றுநேரம் அங்ஙனே நம்மை நிறுத்தி வைக்கின்றன. நகரத்தின் நான்கு திசைகளிலும் இருக்கும் நான்கு கோபுரங்களும் அவைகளிலமைந்த வாயில்களும்,

எல்லைநின்ற வென்றியானை யென்னநின்ற முன்னமால்
ஒல்லையும்பர் நாடளந்த தாளின்மீ துயர்ந்தவால்
மல்லன்ஞாலம் யாவுநீதி மாறுரு வழக்கினுல்
நல்லவாறு சொல்லும்வேத நான்குமன்ன வாயிலே.

[கோபுரங்கள், திக்குக்களில் நிற்கின்ற வெற்றி பொருந்திய யானைகளைப்போல் நிலைபெற்று நின்றன. முன் காலத்தில் தேவலோகத்தை விரைந்தளந்த திருமாலின் பாதத்தைப்போல் மேனோக்கி உயர்ந்தன. அவைகளில் உள்ள வாயில்களோ, நகரத்தின்கண் வளர்கின்ற நீதிகளை, வளப்பம்மிகுந்த உலகங்களுக்கு எல்லாம் தவருமல் வழங்குவதால் சன்மார்க்கம் இதுவென்று காட்டும் நான்கு வேதங்களையும் போன்றன.]

சர்வபோகங்களின் சாரமாகிய நித்திய ஆனந்தம் நிலைத்த நகர் அயோத்தி என முன்னர்க் கூறியதற் கிணங்க இங்குக் கம்பர் அவ்வானந்தத்தின்பால் உய்க்கும் வேதமாக வாயிலைக் கூறினர். தன்னுள் இருக்கின்ற நீதியை உலகத்திற்களித்துத் தன்னையே இன்பத்திற்கு வழியாகக் காட்டுவதால் அயோத்திவாயிலும் வேதமும் ஒன்றேயாயின.

இந்தக் கோபுரம் முற்றிலும் பொன்னுலாயது. இனமணியாவும் எங்கும் புதைத்துள்ளது. சிகரத்திலே மாணிக்கக் குடம் வைக்கப் பெற்றிருக்கின்றது. வடிவத்திலும் கிரீடம் போன்றது. ஆதலால், பூமிதேவிக்கு, உருவத்தாலும் உயரத்தாலும் பொன்மணிச் சிறப்பினுலும், ஏற்றவோர் மகுடம் சூட்டியதென்ன ஒவ்வொரு கோபுரமும் தோன்றியது.

இன்னவித கோபுரத்தால் விளங்கிய வாயிலின் வழியாய் நகரினுட்புறம் நாம் ஏகுதற் கியன்ற தருணத்தில் அதன்மீது நிகழ்ந்த பக்ஷிநாடகமொன்று நம் கண்களைப் பறிக்கச் சிறிதுநேரம் நிற்கின்ருேம். அணுவின் நுட்பமும் அண்டத்தின் பெருமையும் இரண்டும் செவ்விதின் உணர்ந்தனுபவிக்கும் புலவர் மனம். புவிமகளுக்கு மௌலியும் சூட்டுவார் கம்பர். புறவொன்றின் ஊடலுக்குக் காரணமும் காட்டுவார் அக்கம்பர்.

தாவில்பொற் றலத்தினற் றவத்திஞேர்க டங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவியொத்த வன்புசேவல் கூவவந் தணைந்திடா
ஓவியப் புருவின்மா டிருக்கவூடு பேடையே.

கோபுரத்தின் மீது நடந்த நிகழ்ச்சி இது. அங்குப் பலவிதமான சித்திரப்பதுமைகள், விலங்காகவும் பறவையாகவும் மாந்தராகவும் தேவராகவும் செய்து அமைக்கப் பெற்றிருக்கும். அவைகளின் புறவின் சித்திரமொன்று. அச்சித்தரப் புருவின் பக்கத்தில் ஆண்புரு (இது உயிருடையது) ஒன்று உட்கார்ந்திருந்தது. இதனை அணையவந்த பெண்புரு சமீபத்தில் நெருங்கியதும் இதன் பக்கம் எய்தாமல் விலகிச் சிறிது தூரத்தில் இறங்கிவிட்டது. இறங்கிவிடவே, அதன் உயிரையொத்த சேவற்புரு 'வா வா' என்று பரிவினுடன் கூவியழைத்தது. ஆனுல் பெண்புருவோ, தனது நாயகனுக்கு அருகில் இருந்த சித்திரப்புருவை மெய்யான பக்ஷியென்று மயங்கி 'இவன் பிறமாதரை விரும்பிப் பக்கத்திலே வைத்துக் கொண்டிருக்கின்ருன்' என எண்ணி ஊடல் கொண்டு பறந்து போய்விட்டது. கோபுரத்திலிருந்து பறந்து போனுல் தங்குவதற்கு அருகாமையில் இருந்தசோலையும் கற்பகச் சோலையல்லாது வேறு ஏது. 'அயல் மாதரை அருகே வைத்து என்னையும் அழைக்கின்ற நாயகனுடன் கூடிவாழ்வெனே' எனத் தன் வாழ்க்கையை வெறுத்துப் பெண்புரு, தவசிகள் வசிக்கும் கற்பகக் காட்டை யடைந்து பூக்களுக்கு இடையே ஒளிந்துகொண்டு விட்டது.

அடுத்த நாள் அயோத்திமா நகருட் செல்வோம்.

T. N. சேஷாசலம்.



# அகப்பொருள் வரலாறு.

[196-ம் பக்கத் தொடர்ச்சி]

## பாங்கியிற் கூட்டம்

தலைமகனை மடல்விலக்கி அவன் வேண்டிய காரியத்தை முடித்துக்கொடுக்க நேர்ந்து, அவனுடன் தலைவியைக் கூட்டிவைக்கும் பொருட்டுக் கையுறையோடுஞ் சென்ற பாங்கி அவளைக் கூடித் தலைவனது விருப்பத்தைத் தெற்றெனக்கூறின் அவள் பெருநாணினளாதலின் மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, "கொழுகொம்பின்றி நடங்கும் கோமளவல்லிபோல்வாய்! யாம் புள்ளினங் கடிந்தோம்பும் புனத்தருகே சேயோனனைய செம்மலொருவன் உலகம் புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன் ;

இல்லோர் புன்கண் ஈகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையும் உடையன் ;

தொடைமாண்ட கண்ணியும் வில்லுமேந்தி, வயக்களிற்றின் அடிதேர்வான்போல் அடிக்கடிவந்து பலசமயம்,

என்னை நோக்குபு

முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயரும் ;

சிலவேளைத் தன் ஆண்டகைமையை விட்டு என்னை ஒன்றிரப்பான்போல இளிவந்தனவுஞ் சொல்வான். நேற்று அவன் தான்வரும் வழியிடை ஓரலவன் தன் பெடைக்கு வண்டனையதோர் நாவற்கனியை நல்கக் கண்டு பேதுற்று நிற்கவுங் கண்டேன். அவனெண்ணம் யாதென யான் அறிகிலேன் ; நீ அறிய வல்லையோ தோழீ ? அவன்மாட்டு இனி நான் செய்யத்தக்கது யாதோ ?

கையுந்தழையும், கருகிய மேனியும், கட்டுரையும்
பொய்யும்,புதியர் பழையரும் போல்வர்,புனமகலார்
வையங் கடந்த மலரடியார்தம் மகனுக்கொப்பார் ;
செய்யுந்திறம் என்கொலோ, திருவே, அவர்
சிந்தனைக்கே

எனப் பொதுவகையால் அவளை உசாவினுள்.

அப்பொழுது தலைவி உயிர்ப்பாங்கிக்கும் உண்மையை உணர்த்த வெட்கி, அவளுக்கு நேரான மாற்றமொன்றும் நேராது முன்னத்தின்னுணருங் குறிப்பு மொழியால் விடையளிக்க விரும்பி, அவள் சொல்லியதொன்றுந் தன் செவியுள் நுழைந்து மனம் புகுந்திலதுபோல, "உவக்காண், ஒண்ணுதலாய்! தேமாங்கனியொன்றைத் திருடிச்சென்று களவினிலயின்று களித்திடு கடுவன் பசித்தாற்போல பரிந்து முன்னின்ருேர் குறமகன் கைக்கனியை குனிந்து நின்றிரக்கும் வஞ்சவினயத்தைப் பார்" என்ருள்.

அதைக்கேட்ட பாங்கி தன்னுரையின் இங்கிதத்தை இறைவி அறிந்திலளென ஆசங்கையுற்று, "முன் நம் புனத்தருகே வந்து கலையுங் களிறுங் கேழலும் வினவிப் போந்த வெற்றிவேலண்ணல் பூவுந் தழையுங் கொய்து கொணர்ந்து தருவதும், போவதும், மீள வருவதும், நம்புனத்தயலே நிற்பதும், நினைக்குறித்தென்றே நினைக்கின்றேன், தோழீ. உணர்ந்துள்ளையேல் ஒளிக்காமல் உண்மையை உரைத்தருள்." என்ருள். அதைக்கேட்டு மனம்நொந்தாள் போலத் தலைவி, "இவ்வரையகத்தே வேட்டை யாடவும் விநோதங் காணவும் விரும்பித் தினந்தோறுந் திரிவார் பலர். அவ்வாறு வேறு குறிக்கோளின்றி வரும் ஏதிலாரொருவரைக் கண்டு அவர் என்னை நாடிவந்தவரெனக் கருதி இவ்வண்ணம் நீ உரைப்பது, இளமைதொட்டு என்னுடன்இரண்டறக்கலந்து பயின்று பழகி என்னைநன்கறிந்துள்ள உனக்கு ஏற்பதன்று காண். பூக்கொய்யுஞ் சோலையிலும், புனலாடும் பொய்கையிலும், பொய்தலயரும் பொழிலிலும் உன்னுடனன்றித் தனித்து நான் என்றேனுஞ் சென்றதுண்டோ ?

இல்லா தியம்புபவும் எலாதுரைக்கவும் யானென்றிங்கு
வல்லாது சொல்லவும் வல்லைகொல்லோ ? வண்டலாடி
கல்லாரவாவியினும் கடிகாவினும் நீயருகு [டத்தும்
நில்லாத போதுண்டோ ? என் சொனுய் இன்சொல்
நேரிழையே

என்னுமாற்றமிசைப்பப் பாங்கி, "எம்பெருமாட்டி, உண்மையை எனக்கு மறைத்து நீ வஞ்சமொழி கூறலால் நானினி உன் மனக்கிசைந்த உயிர்த்தோழி அல்லேன் போலும். அம்பலுருமல் மாவடுவுண்ணும் வகையறிந்த காதற்ருேழியர் பலருளர் உனக்கு. உன்னுள்ளக்கருத்தை அவர்க்கு வெளிப்படக்கூறி அவரொடுஞ் சூழ்ந்து உனக்கேற்றபடி செய்திடு. பழையமெனக் கருதி இப்புழிமொழி பகர்ந்த பண்பிலேன் பிழையைப் பொறுத்து, இனி என்னையும்,நான் சொன்ன தீங்கையும் மன்னித்து மறந்தருளுதி" எனப் புலந்தாள்போலப் புகன்று பின்னும் "நான் எவ்வழிச் செல்லினும் நிழலென விடாது என்னைப் பின்பற்றிவரும் பெண்ணருங்கலமே, உன்னோவென்னோ என்னை நீ மறைப்பது ? நெஞ்சறியா நினைவும் காற்றறியா மணமும் தாயறியாச் சூலும் உண்டோ ? விலைகண்டறியா இம்முத்தும் நம்மலைகண்டறியாத இத்தழையும் கொள்ளத் தகுவனவன்றி எள்ளித் தள்ளத் தக்கன அல்ல. அவர்தந்த மணிவடமிது உனக்கினிய பணியாரமாம் ; தளிரிவை நின்குழற்குக் கண்ணியும், காதுக்குக் குழையும், அரைக்குத் துகிலுமாம். மேலும் அவர் நினது எழிலாகத்திடைக் கிடந்த பேராசை மனங் கவற்ற ஆற்ருராகி

உருகுகாதலின் தழைகொண்டு மழலை வண்டோச்சி
முருகுநாறு செந்தேனினை முழைநின்றும் வாங்கி
பெருகுசூலிளம் பிடிக்கொரு பிறைமருப்பியானை
பருகவாயினிற் கையினின் றளிப்பது பார்த்தே

உணர்வழிந்து மெய்சோர்ந்து தலைசாய்த்து வேலூன்றி நிற்கக்கண்டு உடைந்துகாத என்னெஞ்சம் கன்னெஞ்சமே. தழை கொய்து கொய்து அவர் கையுஞ் சலித்தது, என்னிடம் குறைவேண்டி நடந்து நடந்து அவர் காலுந் தேய்ந்தது. அவருடைய இளிவந்த பணிமொழிகளைக் கேட்டுக்கேட்டு என் காதுந் தூர்ந்தது ; அவருக்குப் பொய்மொழி புகன்று புகன்று எனது நாவுந் தொலைந்தது. இனி எனக்கு அவர்முன் வெளிப்பட்டு நிற்க முடியாது " என்று நயமொழி நவின்றிரந்தாள்.

இவ்வாறு பாங்கி சொல்லக்கேட்டுத் தலைவனது துயர் நிலையை உணர்ந்த தலைவி, இனி உண்மையை யொளித்தல் ஒண்ணுதென ஓர்ந்து, இதுகாறுந் தான் அவன் வேண்டுகோளுக்கு இணங்காதவள்போற் காட்டிய வெளி வன்மையை நழுவவிட்டு மென்மொழியால், "மறுவிலா மனத்தாய்! நான் உன் வார்த்தையை என்றேனும் மறுத்ததுண்டோ ? நீ ஏனிவ்வாறு என்மீது வீணபவாதம் ஏற்றுகின்ருய். உன் விருப்பின்படி நடக்க நான் இன்றும் என்றுஞ் சித்தமாயிருக்கின்றேன். எனக்குண்டாம் புகழும் பழியும் உன்னுடைய அல்லவோ ? உன்

கையிலுள்ள அக்கையுறைப் பொருள்களைத் தா." என்று தலைகுனிந்து அவற்றை வாங்கிக் கண்ணிலொற்றிக் கையில் வைத்துக்கொண்டாள்.

தலைவியை அன்னணம் அங்கே நிறுத்திவிட்டு உடனே பாங்கி விரைந்து சென்று தலைமகனையுற்றுத் தலைவி ஒருப்பட்டதையும், கையுறையை ஏற்றதையுங் கூறி "அவள் அத்தளிர்களை அரைத்துப்பூசிக் கரைத்துக் குடித்திலளே அன்றிச் செய்யாதன ஒன்றுமில்லை;

வாங்கினள்; முலைக்குவையில் வைத்தனள், சிரததால்
தாங்கினள், மலர்க்கண்மிசை யொற்றினள், தடந்தோள்
வீங்கினள், மெலிந்தனள், குளிர்ந்தனள், வெப்போ
டேங்கினள், உயிர்த்தனள். இஃதின்ன தெனலாமே."

என அவள் அப்பொழுதுற்ற கழிபேருவகையையுந்தெரிவித்து, "அதோ, குவளையார்ந்த குண்டுசுனைப் பாங்கர்த் தாரகைக் குழுவென ஒண்மலர்ததைந்த நாகமரமிரண்டு நடுவே திகழ்ந்து, வண்டும் வாடையுந் தென்றலுமன்றி என்றுங் கோடையுங் கொண்டலும் புக்கறியாக் குளிர்பொழிற் பொதும்பரே யாம்விளையாடிடம்" எனக்காட்டி, அங்கு வருகவெனக் குறிப்பாற் கூறி, அவனைப் போக விடுத்துத் தான் மீண்டுசென்று தலைவியைச் சேர்ந்தாள் பிறகு இருவரும் தமது காவற்குரிய தினைப்புனத்தை யுற்று அங்கே தங்கியிருந்தார்கள்.

அற்றைப் பிற்பகலில் வழக்கம்போல் விளையாட்டு விரும்பிவந்த தோழிமார்களையும் உடனழைத்துக் கொண்டு தலைமகளோடு மலைச்சாரல் புகுந்ததும் பாங்கி "நாம் வயின்வயின் சென்று சிலம்பெதிர் கூவியுங் கொடியூசலாடியும் அருவியில் துளைந்தும் பூக்கொய்துந் தளிர்பறித்தும் விளையாடுவாம்" என்று சொல்லப் பிறரெல்லாம் தனித்தனியே நாலாபக்கமுஞ் சென்றிட்டார். பிறகு அகலாது தன்மருங்கே நின்ற தலைவிக்கு "நாம், அப்பூநாகப் பொழில்வாய் விளையாடுகம், வா" எனச் சொல்லி அவளை அழைத்துச்சென்று அங்கே நிறுத்தி, "நீ இங்கே சிறிது இளைப்பாற்றி இரு. நான் உனக்கு நறுமலர் கொய்து கொணர்கின்றேன். உனது தோளுக்குடைந்து வேயினம் உகுத்த முத்துக்கள் சிதறி வழியெல்லாம் பரலென உனது பஞ்சின் மெல்லிய பாதங்களில் உறுத்தும். நீ அங்கு வாரற்க." என்றகன்றாள். அகன்று தான் குறிப்பிட்ட நாகமரப் பொதும்பரிடத்தே முந்தியே தலைவன் வந்திருக்கக்கண்டு,

பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர்
பாவையொரு
தனியேகிடந்தழும்; தாயுமங்கில்லை. தடஞ்சிலம்பா
முனியேல், விடைகொள்வல். முற்றும் நின்காவல்
முகிழ்நகைச்செங்
கனியேய் இனியசெவ்வாய் நவ்விமான்விழிக்
காரிகையே.

எனத் தலைவி தனித்திருக்கும் இடத்தை அவற்குணர்த்தித்தான் அவ்விடம் விட்டகன்றாள்.

உடனே, ஆதரம்பெருகத் தலைமகன் அங்குச்சென்று அவளை எதிர்ப்பட்டு "என்மனத்திருள் நீங்கவந்த மாமணி விளக்கே. நின்விழி நஞ்சுண்டு பித்தேறி வருந்தும் எனக்கு உன்மலர்வாய் நல்லமிழ்தளித்து அந்நோய் தீர்க்கக் கருதியோ என்னைநாடி இங்குவந்துளாய்?" என முன்னிலையாக்கி அவளை நெருங்கினான். நெருங்கி, அவன் அவளைக் கைப்பிடித்தழைத்துச் சென்று அந்நாகப்பொதும்பர் புக்குப் பன்மலர்பரந்த நன்மெல்லமளியில் அவளுடன் கூடிக் குலவிக்களித்துப்பின்பு அவளைக் குழல்முடித்து அணிதிருத்திக் கோலஞ்செய்து, மந்தாமாமத்தில் வாசுகி வடம்பூட்டி வெண்கடலைக் கைநோவக் கடைந்திடாது அமுதளிக்கவல்ல மதிமுகத்து மலர்த்திருவே, உன்னுயிர்ப் பாங்கியின் அருளால் இனிநமக்குப் பிரிவில்லை. பொழிலகத்தே நீ விட்டுவந்த ஆயத்தைச் சேர்ந்தினிது விளையாடுவாய்." என அவளைச் செல்ல விடுத்துத் தான் அவ்விடம் விட்டு அகன்றான்.

அவனைப் பிரிந்து தனித்து நின்ற தலைமகள் தானும் பூக் கொய்யலுற்று, பிரிவாற்றாமையாலும் பெருநாணத்தாலும் அறிவு தடுமாறி நனையும் நாண்முறியுங் கொய்யா நின்றகாலையில் பாங்கி அங்குத் தலைப்பட்டு "குறுவியர் பொடித்த பிறைநுதற் பேதாய்! நின்விழிபோன்ற குவளையும், மெய்யன்ன மாந்தளிரும், கையொத்த காந்தளும் பறித்து வந்துளேன். விரல் வருந்த நீ மொட்டுக்களைப் பறிக்க வேண்டா." என்று தான் கொணர்ந்த பூக்களை அவள் கூந்தலுக் கணிந்து,

பாடின மேதகு பஞ்சரம் செஞ்சிறைப்
பாணினங்கள்.
வாடின மேனியும் வண்ணமுந் தோளும்.
மலர்க்கழுநீர்
சூடினமே; ஒண்சுனையுங் கழங்கும்
துளங்குபந்தும்
ஆடினமே; இனிநாம் வண்டலாயம்
அடைகுவமே.

என்று அவளை அழைத்துச் சென்று தோழியாயத்துள் உய்த்து, மீண்டுந் தலைவனிடம் போய், "துரிசிலாத் திருமனத்தீர்! எந்தலைவி காரணமாக நீர் செவ்விபார்த்துழன்று பன்னாளுரைத்த பணிமொழிநோக்கி உம்மிருவரையுங் கூட்டிவைத்த எனக்கும் என் மொழிவழி நின்ற தலைவிக்கும் பழியொன்றும் வாராது காத்தோம்பிடும்.

பெடைநின்று காண உடனின்ற தோகை
பெருநடஞ்செய்
புடைநின்ற சோலைப் பொதியவெற் பாபொற்
குழைதொடரும்
கடைநின் றுகுபுனற் கண்ணிக்கும் நின்புகழ்
காவலுக் தும்
இடைநின்ற பாவிக்கும் ஏத முறுவண்ணம்
எண்ணுகவே."

என ஓம்படைசாற்றி அவரைப் போகவிடுத்துத் தான் விரைந்து மீண்டுவந்து ஆயத்தைச் சேர்ந்தாள். அப்பொழுது அந்தி வந்தணுகக் கண்டு அவரெல்லாம் அவணீங்கித் தோழியர் தத்தம் உறைவிடமேகத் தலைவியும் பாங்கியும் தாங்காவல் புரியும் தினைப்புனஞ் சென்றடைந்தார்.

தலைமகனுந் தன்னூருக்குத் திரும்பிப் பாங்கனையுற்று நடந்ததைச் சொல்லிப் பின் தன் பொன்மனையடைந்து படர்தீர்ந்திருந்தான்.

இவையெல்லாம் ஆறுநாட் செய்தி.

K. இராமரத்நம் ஐயர்.



# மதிப்புரை.

## காதம்பரி

[சென்னை வெஸ்லியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் வித்வான் இ. கி. நடேச சர்மா எழுதியது. பிரசுரித்தவர்:—மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ், திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணா 12.]

காதம்பரியின் கதையைக் கற்பித்தவர் வடமொழி மகாகவி பாணபட்டனார் ஆதலின் கதையமைப்பின் திறத்தைப் பற்றியேனும் பாத்திரங்களின் பொருத்தமேனும் நாமிங்கு ஆராயவேண்டிய அவசியமில்லை. ஆனால், அக்காப்பியத்தைப் 'பெரிதும் தழுவி' நற்றமிழில் எழுதியுள்ள வித்வான் ஸ்ரீ இ. கி. நடேசசர்மா அவர்களின் புத்தகத்தினின்று முதனூலின் பெருமை யாதெனத் துணிவது அருமையா யிருக்கின்றது. கதையமைப்பிற் சுவையொன்றும் காண்கிலேம். சம்பாஷணைப் பாகமெல்லாம் சாரமில்லாமல் இருக்கின்றன. தர்மப் பிரசங்கம் செய்யும் இடமெல்லாம் நிகழ்ச்சிக்குப் பொருந்தாமல் இருக்கின்றன. மகாசுவேதையும் காதம்பரியும் அவ்விருவர் காதலரும் யாவரும் அன்புகொண்டதால் யாதோ அடாத காரியம் செய்துவிட்டதாகச் சொல்லிச்சொல்லிப் புலம்புவதன் பொருளறிதலரிது. கதையின் பாத்திரங்களில் கிளியும் குதிரையும்ஆகிப் பிறந்தவர் பிறக்க மற்றவர்களும் கந்தர்வ மனித இனங்களுக்கு ஏற்றவர்களாய்க் காணவில்லை. ஷேக்ஸ்பியர், ஸ்காட் முதலாயினோர் கதைகளின் கற்பனையும் கம்பரின் சம்பாஷணைத் திறமும் கண்டுமகிழ்ந்தவர்க்குக் காதம்பரியின் கதையைக் கேட்கப் பொறுமையை மிகுதியும் கையாளவேண்டி வரும்.

முதனூலையும் வழிநூலையும் வைத்து நாம் ஒப்புநோக்கவில்லை. ஆதலால் இதனிற்காணும் கருத்துக்கள் எத்துணை இரண்டினிற்கும் பொதுவாயுள்ளன வென்பது அறியோம். செய்திகளைக் கூறுவதில் சுவையோடமைக்க வேண்டுமெனும் சிரத்தையே யில்லாமல் எப்படியாவது சொல்லிக் கழிந்தால் போதும் என்னும் தன்மையிலேயே நூல்முழுவதும் அமைந்திருக்கின்றது. கதையில் வருகின்ற ஒவ்வொருபாத்திரமும்ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் "கால்கைகளைச் சுத்திசெய்து நீராடிக் கடன்களைமுற்றி" அப்புறம்தான் ஏதுவேனும் பேசவோ செய்யவோ தொடங்குவார். கதையைச் சொல்வது கிளியானாலும் கூறியதையே எத்தனைதரந்தான் கூறுவது! இப்படிக் கதையின் வளர்ச்சிக்கு யாதொரு பயனும் இலாத செய்திகள் புத்தகம்முழுவதும் கூறப்பட்டுள்ளன. அனையகூற்றுக்களில் சில, ஆசிரியர் நகைச்சுவை விளைக்க நினைக்காத இடத்திலும் (நகைச்சுவை யென்பது இப்புத்தகத்தில் மருந்துக்குமில்லை), படிப்பவர்களைச் சிரிக்கச் செய்யும். உதாரணமாக:—

"சிலநாட்கள் கழிந்ததும்கடவுளாருளால்விலாஸவதி (அரசனது மனைவி) கருக் கொண்டனள். மாதங்கள் ஆகவாகக் கருவும் முதிர்ந்து வந்தது. அவள் கருவின் பொறையால் மெல்ல மெல்ல நடந்தாள்; பொய்த்துயில் கொண்டாள்; புளிக்கு முவந்தாள்; அவளதுமேனிவெளுத்தது. இச்செய்தியைக் குலவர்த்தனை எனும் முதியாளொருத்தி, சுகநாஸருடன் (இவர் மந்திரி) அளவளாவி அரியணை மீதிருக்கும் தாராபீடற்கு (அரசன்) அறிவித்தனள். அரசனும், 'அன்றுகண்ட கனவு உண்மையாய்விட்டது போலும்!" என்று மகிழ்ந்தான். பின்னர் அவன் அமைச்சருடன் நேரில் அந்தப்புறஞ் சென்று, செய்தியை யுணர்ந்து கழிபேருவகை பூத்தனன்"

மகப்பேறு இல்லாது பலநாள் வருந்திய வேந்தன் கனவிலே தனக்குப் புத்திரன் பிறக்குமென்னும் குறி காணப் பின் அது எந்நாள் நிகழுமோவென ஏக்கங் கொண்டிருப்பதும், நிகழும்காலையில் மகிழ்வதும் இயற்கையே. கருப்பொறையால் மெல்ல மெல்ல நடந்த பின்னும் (மற்றக் கருப்ப வேறுபாடுகள் கிடக்கட்டும்) அறியாமல், குலவர்த்தனை சொன்ன பின்பு ஆராய்ச்சி செய்யத்தலைப்பட்டு மந்திரியோடு நேரில் அந்தப்புறம் சென்று ஒருவன் தன் மனையாள் கருப்பவதியாயினள் என்று தெரிந்துகொள்ள வேண்டும்!

காதல் நிகழ்ச்சிகள்யாவும் 'காணவேண்டுமே, காதல் கொள்ளவேண்டுமே, இது நமதுகடன் ஆயிற்றே' என்று நேர்கின்றனவே யல்லாது ஒருவருக்காவது சிறிதேனும் இந்தவிஷயத்தில் ஊக்கம் இருந்ததாக எம்புத்தியிற் படவில்லை. ஏமகூடம் சென்று சந்திராபீடனும் காதம்பரியும் புரிந்த காதலெல்லாம் முன் சொன்னபடி காலைக்கடனும் மாலைக்கடனும் மாற்றி மாற்றி முடிப்பதிலேயே முடிந்து போயிற்று.

சம்பாஷணைப் பாகங்களோ, அவரவர் சொல்ல வேண்டியதைச் சொல்லித் தொலைக்கவேண்டுமே என்னுந் தன்மையில் நிகழ்கின்றன. வந்தவர்களுக்கு உபசாரம் சொல்லி வரவேற்பதும் போகிறவர்களை உபசாரம் சொல்லி வழியனுப்புவதும் ஒருபோதும் ஒருவரேனும் தவறமாட்டார். இடைப்போதெல்லாம் தம்மைத்தாம் நொந்து கொண்டு "என்ன அடாதகாரியம் செய்துவிட்டேன் நான்" என்று புலம்பிக் கொண்டிருப்பார்.

செய்தியும் சம்பாஷணையும் இவ்வாறாகச் சோகரஸப் பிரதானமான இக்கதையில் அழுவதும் 'அழுது தீர வேண்டுமே' என்னும் நோக்கத்தின்படி நடக்கின்றது.

உயிர் நீத்துக் கிடந்த தன் காதலனின் முகத்தைக் காதம்பரி இமையாமற் பார்த்துப் புலம்பல் ஒழிந்து அசையாதிருந்தனள். இந்நிலையை அவள்தோழி பத்மலேகை கண்டு பின்வருமாறு வேண்டுகின்றனள்:—

"எம் பெருமாட்டியீர், ஏன் மௌனம்? கதறி அழுதாலன்றி இத்துயர் நீங்குவதோ? நீர் அழாதிருக்கின், வரம்புடைத்துச் செல்லும் பொய்கையென நும் இதயம் பிளந்துபோம். கந்தருவ குலம் (காதம்பரி, காந்தர்வகுலத்தைச் சேர்ந்தவள்) இருக்கவேண்டுமென்று நினைத்தால் இவ்வாறு (அழாமல்) இருப்பது தகாது. மதிரையார் சித்திரரதர் (காதம்பரியின் பெற்றோர்) என்னு மிவரைக் குறித்தாவது நீர் உயிருட னிருக்க வேண்டும். (ஆதலால் அழு.)"

18899

செத்தவர் செத்தனரே என்று அழுவார், எனவே எண்ணி யிருந்தோம். எஞ்சியவர் சாகாமலிருக்க வேண்டுமே என்று சவத்தின் முன் அழுகின்ற சூழ்ச்சி இன்று உணர்தற் காயிற்று!

கதையும் அதைச் சொல்லும் விதமும் எப்படியிருந்த போதிலும் ஸ்ரீமான் நடேச சர்மா எழுதிய தமிழ்நடை தரமானது. அதனைப் படிக்கப் படிக்க எமக்கு அடங்கா உவகை மிகுகின்றதாகிப் புத்தகத்தை முடிக்க மனம் வந்ததில்லை. செந்தமிழ்த் தொடர்கள் கருத்திற் கிணங்கித் தவழ்கின்ற அழகு இந்நூலளவு நாம் இற்றைநாட் புத்தகங்களிற் காணப்பெறோம்.

"வளர்ந்து வருநாளில், தளிரிடையே மலர் தோன்றி, மலரிடையே தேன்றோன்றி வருவதென, என்னிடையே எழில் இளமைச் செவ்விக் கோலம் வந்து திகழ்ந்தது"

என்று மகாசுவேதை வளர்ந்ததைக் கூறுவதும்,

"இசைக்கலேயே இம்மாதுருவம் கொண்டதெனக் கண்டார் கருதும் பான்மையள்; அணங்கெனும் தன்மையால் இத்துணை ஆண்டினள் என அளந்தறிந்து சொல்ல முடியாதெனினும், பத்தும் எட்டும் கடந்த ஆண்டினள் போலக் காணப்பட்டனள்; அறக்கடவுளின் இதயத்திலிருந்து வெளி வந்தாள் போலவும், நன்முத்துக்களி லிருந்து வெண்ணிறம் வாங்கித் தோன்றினளெனவும், சங்கிலிருந்து கடைந்தெடுக்கப் பட்டாள் போலவும், வெண்ணிறத்திற்கோ ரெல்லை போலவும் தோன்றினள்"

என அவளை வருணிப்பதும், இவைபோன்ற எண்ணிறந்த பல வாக்கியங்கள் பக்கந்தோறும் நிலவிப் படிப்போரை மகிழ்விக்கின்றன.

இவ்வாசிரியர் பண்டைத்தமிழ் நூல்களினின்று ஏற்ற தொடர்களைஎடுத்துத் தம் நூலிற்கலந் தமைத்துக்கொள்கின்ற திறமும் பாராட்டற் குரியது. "நானும், என்னுயிரும் இனியுன் அபயம்," "கார்பெற்ற தோகை யெனக் களித்து," "மதியினிடத்து வெம்மைகாணின் இளவரசரிடத்தும் மாசுகாணலாம்," "செயற்கரிய செய்வார் பெரியர்." "பாலாவி முகந்தன்ன பட்டுடை" "உலம் பொரு தோளினன்" "கண்ணென்று நாடக் கை யொன்று செய்யக் கருத் தொன்றுன்ன......" எனக் கம்பராமாயணம், நளவெண்பா, கலித்தொகை, குறள், சிந்தாமணி, நைடதம், பட்டினத்தார், முதலிய நூல்களில் வரும் சொற்றொடர்களும் கருத்துக்களும் பற்பல இவர் நூலில் பரக்கக் காணலாம்.

தூயதமிழைத் தூயமுறையில் எழுதியிருக்கின்ற இப் புத்தகம் தமிழுலகைப் பெரிதும் மகிழ்விக்கும். வடமொழியொடு தமிழிலும் வித்வத்துடைய இவ்வாசிரியர் இன்னும்பல நூல்கள் எழுதித்தருவது பேருதவியாகும். உயர்தர கலாசாலை மாணவர் இப்புத்தகத்தைப் பொன்னேபோல் போற்றி ஓதுவர் எனப் பெரிதும் விழைகின்றோம்.

## வர்த்தமானம்.

**மந்திரி இருவர் இராஜிநாமா:**—அபிவிர்த்தி இலாக்கா மந்திரி ஸ்ரீ அரங்கநாதமுதலியாரும், மதுஇலாக்காமந்திரி ஸ்ரீ ஆரோக்கியசாமி முதலியாரும், தங்கள் பதவிகளை விடுத்தனர். சென்னைச் சட்டசபையில் முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் சைமன் கமிஷனை ஆதரித்ததின் பயனாகவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆதரிப்பாரில்லாமல் வாதத்திற்கு வாராது போகவே, அதை யொட்டி, மேற்படி மந்திரிகள் இருவரையும் அழைத்துச் சென்னை கவர்னர், நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டசபையின் முன் வரமுடியாது போனதால், முன்னர் இச்சபையில்செய்யப்பட்ட சைமன்கமிஷன் பகிஷ்காரத் தீர்மானமும் ரத்தாய் விட்டதென்றும், எனவே சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் சேர்ந்த இருமந்திரிகளினிடம் சட்டசபைக்கு நம்பிக்கையில்லை யென்று ஏற்படுகிறதென்றும் குறிப்பாய் இடித்துரைக்க அதை யொட்டி இருமந்திரிமார்களும், தம் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டுத் தங்கள் பதவியை ராஜிநாமா செய்தனர்.

**அரங்கநாத முதலியார் அறிக்கை:**— அபிவிர்த்தி இலாக்கா மந்திரி ஸ்ரீ அரங்கநாத முதலியாரைக் கண்டு பேசிய நிருபரிடம், தான் ராஜிநாமா செய்ததற்குக் கூறியகாரணம் வருமாறு:—

நான் ராஜிநாமா செய்ததற்குக் காரணம் என்ன வென்பதை ராஜிநாமாக் கடிதத்தில் நன்கு கூறியுள்ளேன். நம்பிக்கை யில்லாத் தீர்மானம் சட்ட சபையின் வாதத்திற்கு வாராது போனமையால், சட்டசபையின் பகிஷ்காரத் தீர்மானமும் இரத்தாய்விட்டதுஎன்று கவர்னர் சாமர்த்தியமாய்க் கூறியதே முக்கியமான காரணம். பகிஷ்காரத் தீர்மானத்தை ஜஸ்டிஸ் கட்சியினர் உள்பட எல்லோரும் ஆதரித்தனர் என்பது யாவரும் அறிந்ததே. எங்களது சுயேச்சைக் கட்சியினரும் கமிஷன் பகிஷ்காரத்தை ஆதரித்தனர். நிற்க, வெகு நாட்களாகவே எனக்கும், முதன் மந்திரிக்கும், பலவிஷயங்களில் அபிப்பிராய பேதமுண்டு சைமன் கமிஷன் விஷயமாகவும் எங்களுக்குள் அபிப்பிராய பேதமுண்டு. இது விஷயமாய்ச் சில விபரங்களை ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியாரிட மிருந்தும் அறியலாம். என்னைப் பொறுத்த வரையில் அவசியம் ஏற்பட்டாலன்றி எனக்கும் முதன் மந்திரிக்கும் வெகு நாளாயிருந்து வந்த அபிப்பிராய பேதங்களைப் பற்றி வெளியிடப் போவதில்லை. இன்னொன்றும் கூற விரும்புகின்றேன். பகிஷ்காரம் ரத்தாகவில்லை, என்பதைக் கவர்னருக்குக் காட்டச் சட்டசபை மீண்டும் அத்திர்மானத்தைச் செய்ய வேண்டுவது அவசியமாகும். இதுவேதான் கவர்னர் கூற்றுக்குத் தக்க பதிலுமாகும்.

**சிவாஜி ஜெயந்தி:**—சென்ற வாரம், சென்னை கோக்கலே மண்டபத்தில், சிவாஜி ஜெயந்திக் கூட்டம் ஒன்று நடந்தது. அப்பொழுது டாக்டர் சுப்பராயன் தலைமை வகித்தார். சரித்திர ஆராய்ச்சிப் புலவரும் சிவாஜி சரிதையை எழுதினவருமான ஸ்ரீ ஜாதுனாத் சர்க்கார் உபந்நியசிக்கையில் கூறியதாவது:— "சிவாஜி ஒரு அவதாரபுருஷன் என்று சொல்லத்தகுந்தவன். சேனை பலத்தையும், செல்வாக்கையும் கொண்ட முகமதியர்களுடன் போற்றுதற்குரிய வகையில் சிறுசைனியத்துடன் போராடி இந்துராஜ்யத்தைக்கண்டான். சிதறுண்டு அடிமைவாழ்வு நடத்திய மஹாராஷ்டிரர்களை ஒன்றுபடுத்தித் தேசீய உணர்ச்சியை உண்டுபண்ணினன். சிவாஜி ஹிந்துவேயாயினும், பிறமதங்களை அவமதித்ததில்லை என்பதற்கு அவனிடம் வேலையிலிருந்த முகமதியவீரர்களே சான்று. அவனது தனிவாழ்க்கையும் தூயது. சிறைபிடிக்கப்பட்ட மாதர்களைத் தாயென்றே சிவாஜி அழைப்பான். நாட்டையும் நல்லமுறையில் ஆண்டுவந்தான்."

**உத்தியோக நியமனம்:**—அரசாங்க வக்கீலாகவிருந்த ராவ்பகதூர் வி. வி. அனந்தகிருஷ்ண ஐயர் அட்வகேட் ஜெனரல்பதவி பெற்றார். ஸ்ரீமான் பி. வெங்கட்டரமண ராவ்நாயுடு அரசாங்க வக்கீலாக(Government Pleader) நியமிக்கப்பட்டுள்ளார்.

**புதிய சட்ட அங்கத்தினர் ராஜிநாமா:**— சட்ட அங்கத்தினராய் நியமனம்பெற்றஸ்ரீவெட்டராமசாஸ்திரியார், போலீஸ் நீர்ப்பாசன இலாக்காக்களை, தன்னையும் கலக்காது பிரித்து, வேறு ஒருவருக்குக் கொடுத்தமையால், தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

**கமிஷனும் கமிட்டிகளும்:**—சென்ற பத்துவருஷங்களில் ஏற்படுத்தப்பட்ட கமிஷன், கமிட்டிகளால் ஏற்பட்ட செலவின் விபரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1918-19 சீர்திருத்தக் கமிட்டி | ... | $6\frac{1}{4}$ லக்ஷம் |
| 1920-21 ஜெயில் கமிட்டி | ... | $2\frac{1}{2}$ ,, |
| இஸ்லிங்டன் கமிட்டி | ... | $10\frac{1}{2}$ ,, |
| ரயில்வே ஆக்வொர்த் கமிட்டி | ... | $4\frac{1}{2}$ ,, |
| கல்கத்தா யூனிவர்ஸிட்டி கமிட்டி | ... | $3\frac{3}{4}$ ,, |
| இந்தியப் பணக்கமிட்டி | ... | $3\frac{1}{2}$ ,, |
| இந்தியக் கைத்தொழில் கமிஷன் | ... | 3 ,, |
| இந்தியநாணயக் கமிட்டி | ... | $3\frac{1}{3}$ ,, |
| இந்தியச சர்க்கரைத்தொழில் கமிட்டி | ... | $2\frac{3}{4}$ ,, |
| இந்திய வியாபாரக் கப்பல் கமிட்டி | ... | $3\frac{1}{3}$ ,, |
| சிவில் சர்விஸ் கமிட்டி | ... | 3 ,, |
| முட்டிமன் கமிட்டி | ... | $1\frac{1}{2}$ ,, |
| வரிவிஷய ஆராய்ச்சிக் கமிட்டி | ... | $4\frac{1}{4}$ ,, |
| நிலக்கரி கமிட்டி | ... | $3\frac{1}{4}$ ,, |
| விவசாயக் கமிஷன் | ... | 15 ,, |

இவைதவிர செலவு விபரம் தெரியாத பலகமிட்டிகளும்கூடிக் கலைந்துள்ளன. ஐரோப்பியர் சம்பளவிகிதத்தைஉயர்த்த ஏற்படுத்தப்பட்டலீகமிஷன், பாரிஸ்டர்களுக்கும் வக்கீல்களுக்கும் உரிமைகளை நிர்த்தாரணம் செய்ய ஏற்பட்ட ஸ்கீன் கமிட்டி, வடமேற்கு மாகாண எல்லைப்புறக் கமிட்டி, பருத்தி வியாபார ஆராய்ச்சிக் கமிட்டி, இந்திய இரும்புத்தொழில்கமிட்டி, அவைகளில் முக்கியமானவை. இரும்புத்தொழில் சிமெண்டு கைத்தொழில் கமிட்டிக்குமாக செலவு $2\frac{1}{2}$ லக்ஷம். சைமன் கமிஷனுக்கு 15 லக்ஷத்திற்குமேல் செலவாகுமென்று தெரிகிறது.



(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் | 244 பக்கம் | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 ,, | |
| ஆரணியகாண்டம் | 254 ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 ,, | ரூ. 15 |
| சுந்தரகாண்டம் | 260 ,, | |
| யுத்தகாண்டம் | 702 ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | ரூ. 2 4 0 |

**கே. மஹாதேவன்,** புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை



லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினுல் லோகோபகாரிக்குச் சந்தா தாராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் **4.** வெளிநாடுகளுக்கு ரூபாய் **6.**

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனம். (7)

யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்
(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்ளீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

# இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[1913 ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய்.

## நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T.
வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.



# Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues"—Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOKSELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)